அலெக்ஸ் பரந்தாமன்

# தோற்றுப்போனவளின் வாக்குமூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]
04/04/2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றுப் போனவளின் வாக்குமூலம்

அலெக்ஸ் பரந்தாமன்

ஜீவநதி வெளியீடு
2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுப்போனவளின் வாக்குமூலம்
(சிறுகதைத்தொகுப்பு)

ஆசிரியர் : அலெக்ஸ் பரந்தாமன்
முதற் பதிப்பு : பங்குனி 2016
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
அட்டைப்படம்: ந.ஜெயதாஸ் - வேலணை(ஒளிப்படம்)
அட்டைப்பட வடிவமைப்பு : க.பரணீதரன்
வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
பக்கம் : 80
விலை : 200/-
அச்சு : பரணீ அச்சகம், நெல்லியடி

Thotuponavalin vaakumoolam
(Short stories)

Author : Alecks Paranthaman
First Edition : March 2016
Copy Rights : Author
Cover design : K.Bharaneetharan
Publication: Jeevanathy, Kalaiaham, Alvai
Pages : 80
Price : 200/-
Printers : Bharanee Printers, Nelliyady
ISBN : 978-955-4676-38-1
ஜீவநதி வெளியீடு - 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புமகள்
பிரியாக்குஞ்சுவுக்கு
இது
சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

திரு.க. பரணீதரன்

திரு. க. லோகநாதன்

திரு. செ. செல்வராசா

திரு.ந. ஜெயதாஸ்

ஜீவநதி

உதயன் - சூரியகாந்தி

தினமுரசு வாரமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

ஜீவநதியின் 58 ஆவது வெளியீடாக அலெக்ஸ் பரந்தாமனின் "தோற்றுப் போனவளின் வாக்கு மூலம்" சிறுகதைத் தொகுப்பு வெளி வருகின்றது. ஏற்கனவே அலெக்ஸ்பரந்தாமனின் இரு நூல்கள் ஜீவநதியின் வெளியீடாக வெளிவந்து வாசகர்களிடையே நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டது. ஊடகத்துறையில் ஒப்பு நோக்குநராக பணியாற்றும் அலெக்ஸ் பரந்தாமன் அவர்கள் கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம் என இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் எழுதி வருபவர். சமூகம் சார்பான அக்கறையுடன் தன் படைப் பாற்றலை வெளிக்கொணர்டு வரும் இவர் மக்களுக்காகவே இலக்கியம் படைப்பதில் அதீத அக்கறை காட்டுகிறார்.

தொடர்ந்தும் அலெக்ஸ்பரந்தாமன் அவர்கள் இலக்கியத்தில் தன் முத்திரையை பதிக்க வாழ்த்துகின்றோம்.

- க.பரணீதரன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலெக்ஸ் பரந்தாமனின்
## "தோற்றுப் போனவளின் வாக்குமூலத்திற்கான"
## ஓருரை

அறிமுக எழுத்தாளர்களின் ஆக்கங்கள் நூலுருப் பெறும் போது அத்துறையில் ஆழ்ந்தகன்ற அநுபவமிக்கவர்களின் ஆத்மார்த்தமான வார்த்தைகளை நூலின் தொடக்கத்திற் கேட்டுப் பெற்றுப் பிரசுரிப்பது வழமை. அவை அணிந்துரையென்றும், முன்னுரையென்றும் நூல்உள் நுழையும் போது காணப் படும்.

அலெக்ஸ் பரந்தாமனின் "தோற்றுப் போனவளின் வாக்கு மூலம்" எனும் இச் சிறுகதைத் தொகுப்பிற்கு "ஓருரை" வழங்குவதையிட்டு மிக்க மகிழ்வடைகின்றேன்.

சிறுகதையென்பது வடிவம் சிறிது., வல்லமை பெரிதென்பார் எம்.எஸ்.பெருமாள். வாழ்க்கையிலிருந்து பிறந்து வாழ்க்கைக்கு வழிகாட்டுவது தானே இலக்கியம் என்று கூறுவார் சிற்பி-சரவணபவன் அவர்கள்.

அந்த வகையில், தான் வாழ்ந்து வரும் காலப்பகுதியில் காணப்படும் சிலபல சிறுமைகளைக்கண்டு மனம் வெதும்பும் படைப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக பரந்தாமனின் சிறுகதைகளைத் தரிசிக்கக் கூடியதாக உள்ளது. தாம் சிறுமையாகக் கண்டு ஆதங்கப்பட்டவற்றை, அடையாளப்படுத்தும் ஒரு முயற்சியாகவும் இதிலுள்ள சிறுகதை களைக் காண இயலும்.

இவர் காணும் ஆகப்பெரிய ஆதங்கமாக தலைமுறை இடைவெளி- இங்கு என்னால் இனங்காணப்படுகின்றது.

"பாதைமாறி பாதங்கள்", "மனப்புழுக்கங்கள்", "பொன்னாத்தை", போன்றவற்றை இதற்கு உதாரணங்களாகக் கொள்ளலாம். தலைமுறை இடைவெளியைக் கண்டு ஆதங்கப் படும் எழுத்தாளர், அதனுடன் சமரசம் செய்துகொள்ள இயலாது படும் அவஸ்தைகளே, அவரது சிறுகதைகளில் வெளிப்பட்டு நிற்கின்றன. அதற்கான தீர்வுகளைக் காணும் முயற்சியும் அற்றுப்போய் ஒரு "கையறு" நிலையில் நின்று தவிப்பதனை இனங்காண முடிகின்றது. இதற்கான ஆக்கபூர்வமான தீர்வு களைக் காண வழி நடத்தும் போக்கு இன்றி, கழிவிரக்கம் காணும் ஒரு பழைய தலைமுறையாகவே சில கதைகள் காணப்படு கின்றன. இதில் வரும் பழைய தலைமுறையினருடன் தம்மைப் பொருத்திப்பார்த்து. "கத்தாஸிஸ்" எனபடும். மனப்பாரத்தை இறக்கிவைத்து சுகம் காண வழிவகுப்பதுடன், படைப்புக்கள் நின்றுவிடுவதனை அவதானிக்க முடிகின்றது.

அதற்கு மேலாக, வாசிக்கும் இளந்தலைமுறை தமது மூத்தோரின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அவர்களது உணர்வுடன் ஒத்துணர்ந்து செயற்படும் போக்கினை வரித்துக் கொள்ள வழி சமைப்பதாக, படைப்புக்கள் ஒரு சில அமைந் துள்ளன. பாதைமாறிய பாதங்கள் - திசை மாறிச் செல்லும் இளைஞர்களையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் சொல்லி நிற்கின்றது. இதனை வாசிக்கும் போது, வளைக்க வேண்டிய வயதில் வளைப்பதில், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நாம் வாழும் சமூகம் ஒத்துழைத்துச் செயற்பட்டால், இத்தகைய அவல நிலைகளை நீக்கலாம் என்கின்ற எண்ணம், ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற வகையில் என்னை நெருடச் செய்தது.

இந்த இளந்தலைமுறை தோற்றுப் போய்க்கொண்டிருப்ப தற்கான காரணங்கள் இங்கு விஸ்தாரமாகக் கூறப்படா விட்டாலும், அதற்கான காரணிகளில், பங்காளிகளில் நாமும் ஒருவரா என எம்மைக் குடையச் செய்வதில், நெருடச் செய்வதில் சிறுகதை எழுத்தாளர் வெற்றி பெறுகிறார் எனக் கூறலாம்.

"மனப்புழுக்கங்கள்" எனும் சிறுகதை சில அற்ப புழுக் களின் செயற்பாட்டையும், அதனால் எழும் மனப்புழுக்கத்தையும், தெட்டத் தெளிவாகச் சொல்லி நிற்கின்றது. அற்புதமாகப்படம் பிடித்துக் காட்டுகின்றது. கடும் கோடை காலப் புழுக்கம் எமக்குப் பழகிப்போனதொன்று. ஒரு வாகனத்தினுள் அதிலும் சன நெரிசலில் ஏற்படும் புழுக்கம் எவ்வாறு வாட்டும் எனச் சொல்லத் தேவையில்லை. அதிலும் சன நெரிசலில் ஏற்படும் புழுக்கம்... மேலாகச் சிலதுகள் செய்யும் சில்மிஷங்களால் ஏற்படும் புழுக்கம். ஒரே புழுக்க மயம்... எழுத்தாளரின் எழுத்தாற்றலால், வரி வடிவங்களால் அவள் அனுபவிக்கும் புழுக்கத்தை நாமும் அனுபவிக்க வைத்துவிடுகின்றார். இத்தனைக்கும் முத்தாரமாக, அந்த அற்பபுழுக்கள், வெளியே இறங்கிச் செல்லும்போது. ஒன்றுமே தெரியாத அப்பாவிகள் மாதிரி, இறங்கிச் செல்கின்றனர். ஆனாலும் அந்தப் பெண்மணி தவிக்கும் தவிப்பினை புழுக்கத்தை வாசகர் ஒவ்வொருவரும் தமக்கேற்பட்ட புழுக்கமாகத் தொற்ற வைக்கின்றார் எழுத்தாளர். மன வக்கிரங் கொண்டவர்களின் அரியண்டங்களுக்குள் அகப்படும், வாழ்வாதாரம் தேட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள இளம் யுவதியின் மனக் கிடக்கையை உள்ளது உள்ளவாறு பேசும் மனப்புழுக்ங்கள் என்னும் இக்கதை தொகுதியில் மிகத்தூக்கலாக உள்ளது என்பது எனது கருத்து.

நெருப்புத்தின்னிகளும் ஓர் அற்புதப் படைப்பாகத் திகழ்கின்றது. கொஞ்சம் ஓய்வு எடுக்க ஓடி வரும் வேளையில், வீட்டில் எதிர் கொள்ளும் இடர், அனைத்து அசதிகளையும் தூக்கி வீசிவிட்டு, அடுத்த ஓட்டத்திற்குத் தயாராக இருக்கவேண்டிய நிலையை எடுத்துக் காட்டுகின்றது. நாம் அன்றாடம் காணுபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தரிசிக்க வைக்கின்றார். அவர்கள் மீது ஒரு கருணைப் பார்வையைச் செலுத்த வைக்கின்றார். **"மக்களோடு அவர்களது துன்ப துயரோடு ஒன்றாக வாழ்பவர்களுக்கே இத்தகைய படைப்புக்களைப் படைக்க முடியும்"** என்பதற்குச் சான்றாக இக்கதை அமைந்துள்ளது.

தோற்றுப்போனவளின் வாக்குமூலத்தில், பாத்திரத்தின் வயதிற்கு மீறிய உணர்வுகளும் அவ்வுணர்வுகளை வெளிப் படுத்தக் கையாண்ட வார்த்தைப்பிரயோகங்களும் கதையுடன் ஒன்ற வைக்காது வாசகரை அந்நியப்படுத்த வைக்கும் ஒரு தன்மையைக் கொண்டுள்ளதாக உணர்கின்றேன். அந்த வயதுப்பிள்ளையின் வாக்குமூலமாகவன்றி கதைகூறியின் வாக்குமூலமாக வடித்திருந்தால் நாட்டிற்குத் தற்போதைய நிலை யில் மிகவும் அவசியமானதொரு கரு மேலும் தாக்கமுடையதாக அமைந்திருக்கும் என்பது எனது வாசக அனுபவக் கணிப்பு.

இறங்கு முகங்கள் ஊடாக அவர் சொல்ல வரும் செய்தி என்ன என்பதை என் அனுபவத்துள் உய்த்தறிய முடியாத ஒரு நிலை உள்ளது. விமர்சனப்பார்வையில் ஓர் அவசர வாசிப்புக்குள் உட்படுத்தப்படும்போது அதனுடன் ஒன்றிப்போக வாய்ப்பற்ற நிலை காணப்பட்டிருக்கலாம். வழமைபோல வாசிப்பை நேசித்து அதற்கான நேரத்தில் வாசிக்கும் போது இது வேறொரு தளத்தில் அனுபவத்தை வழங்கலாம். இவ்வாறாகச் சுவைபடக் கூறப்பட்ட இக்கதைகள் தொடர்ந்தும் வாசிக்கத் தூண்டுபவனவாக அமைந்துள்ளன என்பது மறைக்க முடியாதவையாகும்.

அன்புடன்

செ. செல்வராசா

ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்

முல்லைத்தீவு, கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோறு போடா(ச்) சுகந்தரும் எழுத்து!

"எழுதுவது எனது தொழில் அல்ல; ஆயினும்
எழுத்துக்களை நான் மிகவும் நேசிக்கின்றேன்.
எழுத்தென் வயிற்றுக்குச் சோறு தருவதல்ல; ஆயினும்
எழுதிக் கொண்டேயிருக்க விரும்புகிறேன்!"

அந்த வகையில்,

எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து எழுதியெழுதி... எழுதிக் குவித்தவை அனைத்தும் போரின் முகத்துள் புதைந்து விட, உயிர்மீண்டு... பின் - மீண்டும் எழுதியவைகளில், ஒரு சில கதைகள் வெளி வருகின்றன இப்போதும் ஒரு தொகுப்பாக! 'தோற்றுப் போனவளின் வாக்குமூலம்' ஆக!

இது எனது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு! மட்டுமல்ல, 'ஜீவநதி'யின் எனக்கான மூன்றாவது வெளியீடும் கூட!

சிறுகதை இலக்கியத்தைக் குறித்து பல தரப்பட்டவர்களிடமிருந்து வெளிக் கிளம்புகின்ற கருத்துக்கள் மற்றும் விமர் சனங்களுக்கு மத்தியில், இத்தொகுப்பினை வெளிக் கொணருகின்றேன் என் வழியே... தனி வழியாய்...!

அத்துடன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமட்ட மனிதர்களின் துன்பியல் நிகழ்வுகளை அவர்களின் மன உணர்வுகளை, ஏக்கங்களை, எதிர்பார்ப்புக் களை, அவர்கள் மீதான சுரண்டல்களை, எடுத்துக் கூறாத, அம்பலப்படுத்தாத எந்தவொரு படைப்பையும் நான் ஆக்க இலக்கியமாகப் பார்ப்பதுமில்லை ஏற்றுக்கொள்வதுமில்லை.

காரணம் –

வெறுமனே 'கதைகளை' எழுதித் தொகுப்பாக்கிவிட்டு, சமூகத்தில் 'படைப்பாளன்' என்ற பெயரைப் பறை தட்டிக் கொள்ளும் செயற்பாடுகளுடன், எந்த விதத்திலும் உடன்பட்டு, அவைகளுடன் சமரசம் செய்து கொள்ளும் மனப்போக்கு என்னிடமில்லை... என்பது, இனிக்காத விடயம் இங்கே பலருள் சிலருக்கு.

**"அழுகிறவனின் கண்ணீரை**
**ஆக்க இலக்கியமாக**
**அம்பலப்படுத்தத் தவறும்**
**அருகதையற்ற பேனாக்கள் அனைத்தும்**
**அடுப்புக்குள் விறகாகட்டும்**
**இக்கணத்தில்"**

அவலப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட, புறமொதுக்கப்பட்ட ஓர் இனத்தில் நானும் ஒரு மனிதன்... என்ற வகையில், அந்த இனத்தின் கதைகளே எனது கதைகளாகவும், எனது கதைகளே அந்த இனத்தின் வெளிப்பாடாகவும் கருக்கொள்ளும் நிஜங்கள்... சிறுகதை வடிவங்களாய் எப்பொழுதும் என்னிடமிருந்து உண்மைத் தன்மையுடன்!

என்னைப் பொறுத்தவரையில் படைப்பாளி என்பவன் பாமர மக்களின் அகக் கண்ணாடி! ஏதோ ஒருவகையில் பாதிக் கப்படுபவன் எவனோ, அவன் அந்தக் கண்ணாடியில் தனது பிம்பத்தைப் படைப்பிலக்கியமாகக் காணும் போது, அக்கணம் அவன் அடையும் மகிழ்ச்சிக்கு அளவேது! நிகரேது! முடிவேது!

இது எனது எழுத்துலக அனுபவங்களின் வெளிப்பாடே தவிர, வார்த்தைகள் வில்லங்கத் திணிப்பல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓர் எழுத்தாளனை அறியவும் அளக்கவும் அவனது படைப்புக்களைவிட, சிறந்தவையாக வேறு எதுவும் இருக்க முடியாது"

(ஜீவநதி - ஆனி 2015, பக் : 46)

என்று கிராமத்தான் கலீபாவின் நழுவி கவிதைகள் பற்றிய விமர்சனத்தில் நாச்சியாதீவு பர்வீன் அவர்கள் கூறும் கருத்தோடு, நானும் உடன்படுகின்றேன் உண்மையாக.

ஏனெனில்,

என்னை அறியவும் என்னை அளக்கவும் என் எழுத்தின் தன்மையைப் புரிந்து கொள்ளவும் இத்தொகுப்பினுள் குந்தி யிருக்கும் கதைகள் மட்டுமல்ல, இனிவரும் எனது சிறுகதைத் தொகுப்பின் கதைகளும் உதவி புரியட்டும் பர்வீன் அவர்கள் கூறியது போன்று.

இத்தொகுப்பினுள் அடங்கியுள்ள சிறுகதைகள் எனது முதற் சிறுகதைத் தொகுப்பின் (அழுகைகள் நிரந்தரமில்லை) கதைகளில் இருந்து சற்று வேறுபடுவதை வாசகர்கள் அவதானிக்க முடியும்.

முன்னைய தொகுப்பின் கதைகள் மனதின் வலிகளைச் சொல்லி அழுகிறது. இத்தொகுப்பின் கதைகளோ வாழ்வின் யதார்த்த துயரினைக் கூறிச் செல்கிறது.

எனது முன்னைய இரு தொகுப்புக்களுக்கும்(கதைகள், கவிதைகள்) கிடைத்த கனதியான காத்திரமான அதேசமயம் காழ்ப்புணர்வுமிக்க கருத்துக்கள், விமர்சனங்கள் பலவற்றை யும் என்மனம் உள்வாங்கிய நிலையில், இந்த இரண்டாம் சிறுகதைத் தொகுப்பை இப்போது வெளிக்கொண்டு வந்திருக் கின்றேன் உங்கள் முன்பாக!

இத்தொகுப்புக்காக என்னைப்பற்றிய ஒரு சிறு குறிப் பொன்றை எழுதியிருக்கும் வலம்புரி பத்திரிகை ஊடகத்தின் பிரதம ஒப்புநோக்குநர் திரு. க. லோகநாதன் அவர்கள் என் அன்புக்கும் மதிப்புக்குமுரியவர். ஊடகத்துறைக்குள் நான் உள்நுழைந்த காலம் (1990) தொட்டு, இன்று வரை என்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொண்டிருக்கும் ஓர் ஆளுமை மிக்க அன்பான மனிதர். இவருடன் இணைந்து ஊடகங்களில் ஒப்புநோக்குநராகப் பணியாற்றிய அந்தக் காலங்கள் அமைதியற்ற சூழ்நிலைகளிலும் மிக அருமையானவை; ஆனந்தமானவை!

பொதுவாக எனது தொகுப்புகளுக்கு "முன்னுரை" எனும் விடயம் இடம்பெறுவதை நான் விரும்புவதில்லை. இருப்பினும், இத்தொகுப்புக்காக நான்கேட்டுக் கொண்டதற்கிணங்க தனது "ஓருரை" ஒன்றை எழுதித் தந்துள்ளார் என்னோடு ஊடகத்துறையில் பணியாற்றும் மதிப்பிற்குரிய ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. செ. செல்வராசா அவர்கள்.

இத்தொகுப்பிற்கான ஒளிப்படத்தை தந்துதவியவர் தம்பி திரு.ந. ஜெயதாஸ்(வேலணை) அவர்கள். ஓவியத்துறையிலும் ஒளிப்படத்துறையிலும் அதீத ஈடுபாடு கொண்டு இயங்கி வருபவர். இவர் எடுத்த ஒளிப்படங்களில் எனக்க மிகவும் பிடித்த ஒளிப்படமே இத்தொகுப்பினை அலங்கரிக்கின்றது.

அடுத்து எனது படைப்புக்கள் தொகுப்பாக வெளிவருவதற்கு என்றும் பக்கத்துணையாய் இருந்து செயற்படும் என் அன்பு மனைவி "அன்பு" மற்றும் அன்பு மகள் பிரியா.

எழுதிய படைப்புக்களுடன் கால ஓட்டத்தோடு அள்ளுண்டு... முடிவில் காணாமல் போய் விடுவேனோ... என்ற கவலை மிகுந்த சிந்தனையுடன் இருந்தவேளை, என் நிலையறிந்து எனது படைப்புக்களை எந்தவித தயக்கமுமின்றி வாங்கி, அவற்றை நூலாக்கித் தந்துதவிய ஜீவநதி கலை இலக்கிய மாத சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தம்பி திரு.க. பரணீதரன் அவர்கள் இத்தொகுப்பையும் அழகுற அச்சிட்டு அட்டைப்படத்தினையும் நன்கு வடிவமைத்துத் தந்துள்ளார்.

அனைவருக்கும் எனது நன்றிகள்! மனப்பூர்வமாக என்றென்றும்...!

- அலெக்ஸ் பரந்தாமன்

"பிருந்தாவனம்"

1 ஆம் வட்டாரம், கைவேலி, மு/புதுக்குடியிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


1. பாதை மாறிய பாதங்கள் 01

2. மனப் புழுக்கங்கள் 10

3. பொன்னாத்தை 16

4. வேண்டுதலும் வேண்டாமையும் 22

5. மனச்சிதைவுகள் 28

6. ஊனப் பார்வைகள் 34

7. இறங்கு முகங்கள் 40

8. நெருப்புத்தின்னிகள் 47

9. கவிதையும் கத்தரிக்காயும் 52

10. தோற்றுப் போனவளின் வாக்குமூலம் 59




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை மாறிய பாதங்கள்

**பொ**ழுது புலர்ந்து கொண்டிருந்தது. சேவல் கோழியொன்று தூரத்தில் எங்கேயோ கூவியபடி இருந்தது. அபரபக்ச நாளில் பிறைச்சந்திரனின் தேய்வொளியில் காரிருள் மெல்லக் கலைந்தபடியிருக்க, நிலம் மெல்லெனவாய் வெளுக்கத் தொடங்கியது.

அப்பொழுது அரசடிப்பிள்ளையார் கோவிலின் உதயகாலப் பூசைக்கான ஆயத்த மணி ஒலிப்பதைக் கேட்டதும், பொன்னுத் துரை படுக்கையை விட்டு எழுந்து கொண்டார்.

அரசடிப்பிள்ளையார் கோவிலின் வருடாந்த மகோற்சவத்தின் ஆறாம் திரு. விழா உபயகாரர் அவர். இன்று அவரது உபய நாளாகையால், நேரத்தோடு எழுந்து கோவிலுக்குச் சென்றுவிட வேண்டுமென்று நினைத்தபடி... முதல்நாள் இரவு உறங்கிய வருக்கு, உடலில் ஏற்பட்ட அசதியின் நிமித்தம் நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டார்.

"இஞ்சரப்பா... கோயில்ல மணி கேட்குது. எழும்பியிட்டியளே...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் படுத்திருக்கும் எதிர்ப்புற அறைக்குள்ளிருந்து அவரது மனைவி மங்களத்தின் குரல் கேட்கிறது.

பொன்னுத்துரை படுக்கையில் இருந்து எழுந்து இருந் தாரேயொழிய, பாயைவிட்டு எழும்பவில்லை. உடலெங்கும் நோவின் உணர்வு தென்பட்டது. உடற்தாக்கத்துக்குத் தன்னுள் உருக்கொள்ளும் உளத்தாக்கமே காரணம் என்பதையும் அவர் அறியாதவரல்லர்.

பரம்பரை பரம்பரையாக... மூத்த ஆண் தலைமுறை யாக அரசடிப்பிள்ளையார் கோவிலின் ஆறாம் திருவிழா உபயம் கடைப்பிடிக்கப்பட்டுவரும் நிலையில், அந்தப் பரம்பரைக் கொள்கை, தான் இறந்து உடலுக்குக் கொள்ளி வைப்பதோடு, முற்றுப் பெற்றுப் போய் விடுமோ... என்று அஞ்சிய போது, அதுவே ஓர் உளத்தாக்கமாகி உடலின் வீரியத்தை உருக் குலைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிந்தது அவருக்கு.

ஆசைக்கு ஆண்பிள்ளையொன்று பிறந்ததென்ற பூரிப்பு, இப்பொழுது அறவே இல்லாமல் போனது அவரிடத்தில். தோளுக்கு மிஞ்சினால் தோழன்... என்றநிலையில், வயதுக்கு வந்துவிட்ட பிள்ளையோடு, அவர் வாய்த்தர்க்கம் செய்வதற்குப் பயந்தார்.

இதுவரை காலமும் கௌரவமாக வாழ்ந்த வாழ்வின் அர்த்தம் தனது ஆண்பிள்ளையினால் அடிபட்டுப் போய் விடுமோ... என்ற அச்சமான சிந்தனைகளே அவர் மனதில் எழலாயிற்று. இதன் நிமித்தம் தன் மகனோடு பேசுவதை தவிர்த்துக் கொள்ள, நாளடைவில் தந்தைக்கும் மகனுக்கும் இடையே ஓர் அந்நியம் ஏற்பட்டு, அதுவே மகனின் விபரீதமான போக்குகளுக்கும் வழி கோலிவிட்டது.

கோவில் கோபுரத்திலிருந்து ஒலிபெருக்கியூடாகப் பக்திப்பாடல் ஒலிக்கத் தொடங்கியதும், பொன்னுத்துரை பாயி லிருந்து எழுந்து கொண்டார். காலைக்கடன்களை முடித்துக் கொண்டார். சுவாமி அறைக்குள் சென்றார். விபூதியை எடுத்து "சிவ... சிவ..." என உச்சாடனம் செய்தபடி... நெற்றியில் தரித்துக் கும்பிட்டபின், அறையை விட்டு வெளியே வந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மகன் அவர் முன்னே எதிர்ப்பட்டான்.

"இந்தக் காலங்காத்தால தொடங்கியிட்டாங்கள். எப்பத் தான் உந்தத்திருவிழாவும் பிள்ளையாற்ர திருக்கல்யாணமும் முடியப் போகுதோ தெரியாது..."

கோவிலில் இருந்து ஒலிக்கும் பக்திப்பாடலின் இசையைச் சகிக்க முடியாமல் மகன் உரத்தகுரலில் கூறியதும், பொன்னுத்துரை சற்று அதிர்ச்சியடைந்தே போனார்.

வார்த்தைகள் தற்செயலாக அவன் வாயிலிருந்து வெளிப்பட்டதா? அல்லது தனது காலைவேளைக்குரிய ஆசார அனுஷ்டானங்களைப் பார்த்துவிட்டு, மறைமுகமான சொற் களால் குத்திக் காட்டுகின்றானா? என்பதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில், அவரது மனம் தவித்துக் கொண்டது.

அவனது கூற்றுக்களுக்கு எதிர்வார்த்தைகள் கூறாது மௌனத்தைக் கடைப்பிடித்துக்கொண்டு, வீட்டின் முற்றத் துக்கு வந்தார். அங்கு நின்ற பூமரங்களிலுள்ள பூக்களைப் பறித்துப் பிரம்புக்கூடைக்குள் போடத் தொடங்கினார்.

"அம்வோவ்..."

வீட்டுக்குள்ளிருந்து மகன் கூப்பிடுவது அவருக்குக் கேட்டது.

"என்னடா...?" தாய் குரல் கொடுத்தாள்.

"பல்லுத்தீட்டுறதுக்குப் பற்பசை இல்லையே...?"

"இல்லை முடிஞ்சு போச்சு..."

"அப்ப நான் எதாலை பல்லுத்தீட்டுறது...?"

மகனின் குரலின் சினம் தெறிப்பதைப் பெற்றவர்கள் இருவரும் விளங்கிக் கொண்டார்கள்.

"அம்மோ..." மகன் மீண்டும் குரல் கொடுத்தான்.

"உங்கை குசினிப் பிளாட்டில பற்பொடி கிடக்குது. இண்டைப்பாட்டுக்குத் தீட்டு. பேந்து கடையில வாங்கி வைக்கிறன்..."

"ஏன் முடிஞ்சுதெண்டாக்கடையில வாங்கி வைக்கத் தெரியாதே...?"

மகன் உரத்து ஏசியவாறு... குசினிக்குள் செல்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குத் தெரிந்தது.

"இஞ்சாருங்கோ..." மங்களம் அவரை அழைத்தாள்.

அவர் பூக்களைப் பறித்துக் கொண்டே மனைவியைப் பார்த்தார்.

"பொடியன் இண்டைக்கு ஏதோ குழப்பத்தில நிற்குமாப் போலத் தெரியுது. நீங்கள் ஒண்டும் கதைச்சிடாதையுங்கோ. கோயிலுக்குப் போற நேரம் பெரிய மன உளைச்சலாய் போயிடும்..."

பொன்னுத்துரை உடனே எதுவும் கூறவில்லை. அருகில் இருந்த செவ்வரத்தம் பூமரத்தண்டினை மெல்ல வளைத்து, அதிலிருந்த பூக்களைப் பறித்தபடி... சொன்னார்.

"நான் என்னத்தைக் கதைக்கிறது. எல்லாம் கைமீறிப் போன மாதிரிக் கிடக்குது. கலியாணம் முடிச்சு அஞ்சு வருசமா பிள்ளையள் இல்லையெண்டு தானே நீ கந்தசஷ்டி... கௌரிக் காப்பு... ஐப்பசிவெள்ளி... அது... இதெண்டு வருசத்தில அறுபத்தெட்டு விரதங்கள் பிடிச்சாய். அரசடிப்பிள்ளையார் எங்களுக்குத்தந்த பலன்...? பின்னடிக்கு உவன் உப்படி தறுதலையா மாறுவான் எண்டு நாங்கள் நினைக்கேல்லை. வரம் கேட்டுப் பெற்றது இப்ப கண்டதே காட்சி கொண்டதே கோலமெண்டு திரியுது. ஐஞ்சில வளைக்கத் தவறியிட்டம். இனி ஐம்பதில வளைக்கிறது கஷ்டம் மங்களம்."

மங்களம் எதுவும் கூறவில்லை. அவள் தோய்ந்து முடித்துவிட்டு மௌனமான நிலையில், ஈர உடுப்புக்களை மாற்றிக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தனது கணவன் கூறிய வார்த்தைகளில் இருந்து, மகனைக் குறித்து எவ்வளவு தூரம் வேதனைப்படுகிறார் என்பது தெளிவாகியது. பெற்றவர்களை மதிக்காது மனம் போன போக்கில் நடந்து கொள்ளும் இன்றைய சில பிள்ளைகளைப் போன்று மகனின் செயற்பாடு களால் ஏற்படும் வேதனைகளையும் விரக்தியையும் நேரிடையாகவே அனுபவிக்கும் போது... பிள்ளையாரிடம் வரமிருந்து பெற்றதைவிட, வாழ் நாளெல்லாம் இந்தச் சமூகத்திடமிருந்து 'மலடன் - மலடி' என்ற அவப்பெயரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கி வாழ்வது ஆனந்தமாக இருந்திருக்குமென்பதை அவள் அடிக்கடி தன்னுள் நினைத்துக் குமைந்தழுவதுண்டு.

மூன்று தலைமுறைகளாக அரசடிப்பிள்ளையார் கோவிலின் 'ஆறாம் திருவிழா உயபகாரார்' என்று ஊரார் வழங்கும் கௌரவப்பெயர் தனது கணவனோடு அற்றுப் போகாதபடிக்கு, அவரிலிருந்தும் தொடங்குவதற்காகவே கடவுள் தனக்கு ஆண் வாரிசாகக் கொடுத்திருக்கின்றார் என்ற ஆனந்தப் பூரிப்பெல்லாம் மகனின் அன்றாடச் செயற்பாடு களோடு அடிபட்டுப் போய்க் கொண்டிருப்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

அறிவியலின் வளர்ச்சியில் உலகம் முன்னேறிக் கொண்டிருக்கின்றது... என்று சொல்லப்படுகின்ற இன்றைய நிகழ்காலத்தில் (அ)நாகரிகத்தின் வளர்ச்சிப் பிம்பங்களாக நீண்ட சடை முடியும்... நெஞ்சுடல் இறுக்கமாகத் தெரியும் ரீசேட் மற்றும் ஜீன்ஸ் அணிதலும்... சப்பாத்து வடிவத்திலான தாடியும்... விரல் இடுக்கில் சிகரெட்டும்... சாலையோரம் பொழுது போக்குகளும்... கடுக்கன் பூட்டிய காதுகளுடன், கழுத்து கைகளில் நாய்ச் சங்கிலி வடிவத்திலான 'செயின்' என்ற பெயரில் அவைகளைச் செத்த பிணத்தின் அலங்கார மாக அணிந்து கொண்டு.... திரைப்பட நடிகர்களின் சினிமா மோகத்தோடு, வாழ்வைச் சீரழித்துக் கொள்ளும் இன்றைய இளம் சந்ததிகளில் அவனும் ஒருவனாக மாறிப் போய் விட்டதை நினைக்க... மங்களத்துக்கு கவலை தாங்க முடியாமல் இருந்தது.

'கோவிலுக்குச் செல்ல வேண்டும்...' என்ற அவசர எண்ணம் மனதுள் அலைமோத, அவள் சிந்தனைகளை ஒதுக்கிவிட்டு, ஈரத்தலையுடன் முற்றத்துக்கு வந்தாள். முற்றத்தில் கணவன் இன்னமும் பூக்களைப் பறித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

"இஞ்சரப்பா"

அவள் கணவனின் அருகில் சென்றாள்.

"இண்டைக்குக் கோயில்ல எங்கட பூசை. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குத் தெரியும். உபயகாரர் கோயில்ல குடும்பமாக நிற்கிறதுதான் நல்லது. இல்லாட்டி ஊர்ச்சனம் ஒருமாதிரியாக நினைக்கும். மதிய பூசை முடிஞ்சாப்பிறகு ஐயரிட்டை காளாஞ்சி வாங்கி உள் வீதியைச் சுற்றி வரவேணும். அப்பதான் கௌரவமாக இருக்கும். பொடியனிட்டை ஒருக்காச் சொல்லி, மத்தியான நேரமெண்டாலும் ஐயரிட்டை காளாஞ்சி வேண்டேக்கை கோயிலுக்குள்ளை வந்து நிற்கச் சொல்லு... என்னப்பா..."

பொன்னுத்துரையின் குரலில் ஆதங்கமும் பரிதவிப்பும் தொக்கி நிற்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது. பெற்ற பிள்ளையோட கதைப்பதற்கு அவர் பயப்படுவதன் காரணம், கட்டுக் கடங்காமல் வளர்ந்து நிற்கும் பிள்ளை, பேச்சு வாக்கில் தகப்பன் என்றும் பாராது கையை ஓங்கி விட்டால்...?

"சரியப்பா நான் சொல்லிப் பார்க்கிறன். நீங்கள் வேளைக்குப் போய் ஐயரிட்டை பூக்களைக் குடுங்கோ... பூசைக்கு நேரமாகுது."

பொன்னுத்துரை மேற்கொண்டு எதுவும் கதைக்க வில்லை. பூக்கூடையை மிதிவண்டியின் 'காண்டிலில்' கொளுவி விட்டு, கேற்றைத் திறந்து கொண்டு தெருவூடாகச் சென்று மறைந்தார்.

"அம்மோவ்..."

தாய் திரும்பிக் குரல் வந்த திக்கைப் பார்த்தாள்.

கிணற்றடியில் மகன் பல்துலக்கியபடி... குளிப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

"இண்டைக்கு என்ன சாப்பாடு...?"

"காலமைக்குப் பழஞ்சோறு பிரட்டி வைச்சிருக்கிறன். குளிச்சிட்டு போய் சாப்பிடு..."

தாயின் பதிலைக் கேட்டு மகன் முகம் சுழித்தான்.

"என்னது பழஞ்சோறோ...? ஏன் இடியப்பம், இட்டலி அவிக்கேல்லையே...?

தாய் சிலவிநாடி மௌனித்துவிட்டுப் பதிலளித்தாள்.

"இண்டைக்கு கோயில்ல எங்கட பூசை. கொப்பாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் விரதம். நேரத்துக்குப் போய் கோயிலடியில நிற்க வேணும். அதால நான் காலமை ஒண்டும் தேடேல்லை. நீ குளிச்சிட்டு சாப்பிடுறதெண்டா சாப்பிட்டிட்டு, மத்தியானம் போல கோயிலுக்கு ஒருக்கா வந்திட்டுப் போ..."

"கோயிலுக்கோ...? ஏன்...?" சற்று அதட்டலாகவே கேட்டான் மகன்.

"குடும்பமா நிண்டு ஐயரிட்டை காளாஞ்சி வாங்க வேணும்..."

"எனக்கு உந்தக் காளாஞ்சியும் வேண்டாம். கத்தரிக்காயும் வேண்டாம். எனக்கு வேறையொரு முக்கியமான அலுவல் கிடக்குது. நான் போக வேணும்..."

அவன் அலட்சியமாகக் கூறிவிட்டு, குளிக்க ஆரம்பித்தான்.

மங்களத்துக்கு கண்கள் கலங்கி விட்டன. மனம் சலித்த நிலையில், கோவிலுக்குச் செல்வதற்கு விருப்பமற்றவளாய் இருந்தாள். தனக்காக கணவன் கோவிலில் காத்து நிற்பார்... என்ற எண்ணம் உந்திட, துயர் கனத்த இதயத்தோடு தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு, கோவிலை நோக்கிப் புறப்பட்டாள்.

கோவிலில் தன் மனைவியின் முகமாற்றத்தைக் கவனித்த பொன்னுத்துரை, அவளிடம் எதுவும் வினாவவில்லை. வீட்டினில் என்ன நிகழ்ந்திருக்கும்... என்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. பிள்ளையாருக்குப் பூசைகள் யாவும் நிறைவு பெற்று, வசந்த மண்டபத்துக்கு முன்பாக, ஐயரிடம் காளாஞ்சி பெறும் போது... அவரால் உணர்வுகளைக் கட்டுப் படுத்த முடியவில்லை. சுற்றியுள்ள சூழ்நிலைகளையும் மறந்து அழுதே விட்டார். காளாஞ்சிகள் சகிதம் தவில் ஒலியுடன் கோவிலின் உட்பிரகாரத்தைச் சுற்றி வருகையில், அவர்கள் இருவரது மனமும் கல்லாய் சமைந்து போய்க் கிடந்தன.

பூசை முடிந்த நிலையில், கும்பிட வந்தவர்கள் ஒவ்வொருவராகக் கலைந்து கொண்டிருந்தார்கள். மங்களத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்குக் கோவிலில் நிற்கப் பிடிக்கவில்லை. உடனே வீட்டை போக விரும்பியவள் தன் கணவனை அழைத்தாள்.

பொன்னுத்துரைக்கும் அப்போதை மனநிலையில் வீட்டுக்குச் செல்வதுதான் உசிதமாகப் பட்டது.

"சரி... நட போவம்..."

இருவரும் காளாஞ்சிப் பொருட்களுடன் வீடு செல்லும் வழியில் எதிர்ப்படும் ஊரவர்கள் அவர்கள் இருவரையும் ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு சென்றார்கள். பொன்னுத் துரை அந்தப் பார்வைகளின் அர்த்தம் புரியாது தவித்தார். தன்னோடு கூடவரும் மனைவி மங்களத்தைப் பார்த்தார். அவளும் அதே உணர்வு கொண்டவளாய், அவரையே ஓர் அர்த்தத்தோடு நோக்கினாள். இருவரது அறிவுக்கும் எதுவும் புலப்படவில்லை.

"என்னப்பா... எதிரவாற சனங்கள் எல்லாம் எங்களை ஒரு மாதிரிப் பார்க்குதுகள்...?"

பொன்னுத்துரை தன் மனைவியை வினாவிக் கொள்கிறார்.

மனைவியிடமிருந்து எந்தவிதமான பதிலும் எழாத நிலையில்... அவர் மௌனமாக நடந்து கொண்டிருக்கையில், அவர்களின் வீட்டுக்கு அருகாமையில் அந்த இளைஞன் வந்து கொண்டிருந்தான். வந்த அந்த இளைஞன் பொன்னுத்துரை யின் தூரத்து உறவுக்காரன். அவர்கள் இருவரையும் கண்டதும் அவன் தன் நடையின் வேகத்தைக் குறைத்தான்.

"குஞ்சியையா எங்கை கோயிலாலையே வாறியள்...?"

"ஓமடாப்பா... ஏன் கேட்கிறாய்...?"

பொன்னுத்துரை ஒருவித சந்தேகத்தோடு கேட்க, அவன் பதில் கூறாது, மௌனமாக அவர்கள் இருவரையும் பரிதாபமாகப் பார்த்தான்.

"என்னடாப்பா... என்ன நடந்தது...? ஏன் பேசாமல் நிற்கிறாய்...?"

வந்து நின்ற அந்த இளைஞன் தன் வாயைத் திறந்தான்.

"நீங்கள் ஒண்டும் கேள்விப்படேல்லையே...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுத்துரையும் மங்களமும் பயப்பீதியுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"உங்கட மகன்காரன் அந்தக் கடுக்கன் போட்ட கூட்டங்களோடை ஆலடி வைரவர் கோயிலுக்கு முன்னால நிற்கேக்கை, பள்ளிக்கூடம் விட்டுப் பிள்ளையள் வந்திருக்குதுகள் அதில உவர் சிவப்பிரகாசத்தாருடைய கடைசிப்பெட்டையோடை ஏதோ 'சொறிக்கதையள்' கதைச்சிருக்கினம் பெட்டை தேப்பனைப்போல கொஞ்சம் விறைப்பான போக்கு. காலில கிடந்த செருப்பைக் கழட்டி, அதில நிண்ட ஒரு கடுக்கன் பொடியனுக்குக் கன்னத்தில நல்லா விளாசினதில பெரிய களேபரமாகப் போச்சுது. பொலிசு வந்து எல்லாரையும் தேடிப் பிடிச்சு, அள்ளிக் கொண்டு போய் மறியலுக்கை போட்டு அடைச்சு வைச்சிருக்குது. நீங்கள் கோயில்ல நிண்டதால தெரியேல்லைப் போலக் கிடக்குது. சரி... நான் போட்டு வாறன் குஞ்சியையா..."

வந்தவன் கூறிவிட்டு, அப்பால் சென்று கொண்டிருந்தான்.

வந்தவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு மலாரடிச்சுப் போய் நின்றார்கள் மங்களமும் பொன்னுத்துரையும்.

- தினமுரசு வாரமலர் : 25.08.2011.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனப் புழுக்கங்கள்

கிழக்கேயிருக்கும் பரந்த வயல்வெளி களிலிருந்து காற்று மெதுவாக வீசிக் கொண்டிருந்த போதிலும், வரத்து வெய்யிலின் வெப்பம் அவளது முதுகினை எரிவூட்டியபடியிருந்தது. உச்சி வகிடெடுத்தது போன்று முன்னால் ஊடறுத்துச் செல்லும் தார்வீதியில் எதிரும் - புதிருமாக சென்று கொண்டிருந்தன கனரக வாகனங்கள்.

7.30 இற்கு வர வேண்டிய பேரூந்து இன்னமும் வராதது குறித்து அவள் தனக்குள் எரிச்சலடைந்தாள். கூடவே பயணத்தின் போது பேரூந்தினுள் அன்றாடம் நிகழும் அந்த அரியண்டங்கள்... அதை நினைக்க, அவளுக்கு இன்னமும் அதிகமாகியது எரிச்சல் உணர்வு.

"இந்த அரசாங்கம் பொம்புளை யளுக்கெண்டு 'மகளிர் பேரூந்து' ஒண்டை ஓடவிட்டால் என்னவாம்...?"

பேரூந்தினுள் அரியண்டங்கள் அதிக மாகும் போதிலெல்லாம் அவள் இதையே அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரூந்தினுள் நிகழுகின்ற அரியண்டங்கள் அவளுக்கு மட்டுமல்ல, வயது வித்தியாசமின்றி நோக்கும் கழுகுக் கண் களுக்குள் எத்தனை பெண்கள் தினம்தினம் இம்சைப் படுத்தப்படுகிறார்கள் இடுப்புக்களால்... முழங்கைகளால்...

மட்டுப்படுத்தப்பட்ட பேரூந்துச் சேவையின் நிமித்தம், காலையில் கிராமத்திலிருந்து பட்டணம் நோக்கிப் புறப்படும் பேரூந்தினுள் பயணிகள் பலரும் நிறைந்தேயிருப்பார்கள். ஏற்றப்பட்ட பயணிகளின் சௌகரியத்தைக் கவனத்தில் எடுக் காமல் மீண்டும்... மீண்டும், வழி நெடுகிலுமுள்ள பயணி களைப் பேரூந்து நடத்துநர் ஏற்றிக் கொண்டே செல்வான்.

"அக்கா...! கொஞ்சம் பின்னுக்குப் போங்கோ. தம்பி! அங்காலை முதுகுப்பக்கம் திரும்பிக் கொண்டு நில்லும். அண்ணை! உதென்ன நடுவில கம்பியைப் பிடிச்சுக் கொண்டு நிற்கிறியள். ஆச்சி! நடுவில குந்திக் கொண்டிராமல் எழும்பிப் பின்னுக்குப் போணை..."

பயணிகளைப் பேரூந்தினுள் ஏற்றும்போது இனிமையாகப் பேசி, ஏற்றும் நடத்துநர் நேரமும் தூரமும் செல்லச் செல்ல சீறிச்சினக்கத் தொடங்கி விடுவான்.

ஆரம்பத்தில் பேரூந்து நடத்துநர்களின் இப்படியான செயற்பாடுகள் அவளுக்கு எரிச்லூட்டுவனவாக இருந்த போதிலும், நாளடைவில் 'சொறிநாய்'களின் அரியண்டங் களைத்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது.

சனநெரிசலைப் பயன்படுத்தி, பெண்களோடு சொறி படும் 'நாய்கள்' பலவற்றை அவள் நாளாந்தம் பேரூந்துகளில் பார்த்து வருகிறாள். இந்தநாய்களுக்கு பெண்களைக் கண்டவுடன், ஏன் இப்படி உடலின் உணர்வுகள் வீரியம் கொள்கின்றன? கிளர்ந்தெழுகின்றன? சகோதர வாஞ்சை யற்ற, சபல புத்தி கொண்ட இவ்வக்கிரச் செயற்பாடுகளின் மூலம், அவைகள் அடைந்து கொள்ளும் இன்பக் கிளர்ச்சிதான் என்ன? என்பதை அவள் பேரூந்தினுள் அரியண்டப்படும் போது அடிக்கடி தனக்குள் கேட்டுக் கொள்வதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைமாதக் கர்ப்பிணி போன்று பாரச்சுமையுடன் நிறையப் பயணிகளை ஏற்றி வந்த பேரூந்து ஒன்று, அவள் பட்டணம் செல்வதற்குக் காத்து நிற்பதையுணர்ந்து, அவளருகில் ஒரு பெருமூச்சை விட்டபடி நிற்கிறது. உள்ளே மூச்சுத்திணறும் நிலையில் பயணிகள்... முகங்களில் செம்மண் புழுதி அப்பிய நிலையிலும், உடலில் வியர்வை வழிந்து கொண்டிருந்ததுமான தோற்றத்தில் காட்சியளித்துக் கொண்டிருந்தார்கள். கூடவே, பேரூந்தினுள்ளிருந்து விசரம் ததும்பும் தற்கால 'வெறி'ப் பாடலொன்று ஒலித்தபடி...

"அக்கா... எங்கை போறியள்? ரவுணுக்குத்தானே! வாங்கோ உள்ளுக்கை இடமிருக்கு..."

நடத்துநர் பொடியன் வலிந்து அழைத்தான் அவளை.

அவள் எதுவும் கூறவில்லை.

ஆண்கள், பெண்கள் எனக் கலவனாக பேரூந்தினுள் நிறைந்து நின்ற அந்தப் பயணிகளைப் பார்த்தாள்.

"அக்கா... வாங்கோ! அடுத்த பஸ் வர இன்னும் அரை மணித்தியாலம் செல்லும். இதிலை போகலாம் வாங்கோ..." நடத்துநர் மீண்டும் அழைக்கிறான் அவளை.

நடத்துநர் கூறியதைக் கேட்டதும் அவளுக்குத் திக்கென்றது.

'இன்னும் அரைமணித்தியாலம் கழித்து பஸ்வருமாக இருந்தால், எட்டகாலுக்கு மேலாகி விடும். என்ன செய்யிறது...? இதிலையே போவோமா...' என அவள் தயங்கியபடி... பேரூந்தின் வாசலை நோக்கி நடந்தாள்.

அவள் பேரூந்தை நோக்கி வருவதைக் கண்டதும் நடத்துநர் பொடியன் 'வழியத்' தொடங்கினான்.

"அக்கா! வாங்கோ... வாங்கோ... இஞ்சை உந்த வாசலில நிற்கிற ஆட்கள் கொஞ்சம் பின்னுக்குப் போங்கோ. அக்கா உள்ளுக்குப் போகட்டும்."

"இஞ்சை எங்கை பின்னுக்குப் போறது...? நாங்கள் என்ன மனிசரோ மிருகசாதியோ...? பட்டிக்குள்ள ஆடு மாடுகளை அடைச்ச மாதிரி..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரூந்துக்குள்ளிருந்து ஒலிக்கிறது ஒரு குரல் கார சாரமாக!

பின்னுக்கு இடமில்லை என்பது நடத்துநருக்குத் தெரியாததொன்றல்ல. ஆயினும், அவன் தனது தொழிலுக் காக, தனது ஒருநாள் வருமானத்திற்காக அப்படி இயங்க வேண்டிய நிலையில் அவன் இருந்தான்.

அவள் பேரூந்தின் மிதிபலகையில் ஏறிக் கொண்டதும், பேரூந்து புறப்படத்தொடங்கியது. சிறிது தூர ஓட்டத்தின் பின், அப்பொழுது, தான் ஏறியது எவ்வளவு பிழையான செயல் என்பது அவளுக்கு புலப்பட்டது.

"புட்போட்டில நில்லாதையுங்கோ! மேலை ஏறுங்கோ. அக்கா மேலை கம்பியில புடிச்சு ஏறுங்கோ..."

ஏறும்போது அவளைக் கண்டு வழிந்த நடத்துநர், இப்போது மிகவும் சீரியஸ்சான முகபாவத்தோடு சினக்கத் தொடங்கினான்.

அவள் நிமிர்ந்து மேலே கம்பியைப் பார்த்தாள். கைக்கு எட்டாத தூரத்தில் அது இருந்தது.

அத்தோடு, இரண்டு ஆண்களுக்கு நடுவில், தான் சிக்கியிருப்பதையும், தன்னை மேலே ஏறவிடாத படிக்கு ஒருவன் முதுகாலும், மற்றொருவன் நெஞ்சாலும் தன் உடம்பை அழுத்திப் பிடித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

பேரூந்தின் ஓட்டத்திற்கேற்ப, அவளுக்குப் பின்னால் நிற்பவன் தனது வயிற்றுப்பகுதியை அவளின் உடம்போடு உரசுவதையும், அவளுக்கு முன்பாக முதுகைக்காட்டிக் கொண்டு நிற்பவன் தனது முதுகை அவளது மார்பு மீது அழுத்த முனைவதையும் பயணிகள் பலர் கண்டும் காணாதது போன்று இருந்தார்கள்.

சனநெருக்கத்தின் மத்தியில், உடலில் வியர்த்து வழியும்... பிசுபிசுப்புத்தனத்தோடு அவளால் எதுவும் செய்ய முடியாததாக இருந்தது. மனமும் உடலும் கூசும் அரியண்டத் துடன், அவள் பயணம் செய்து கொண்டிருந்தாள்.

'எளிய கேடுகெட்ட பிறப்புகள்...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுள் எழுந்த வெஞ்சினம்... வார்த்தைகள் வெளியே வராத நிலையில், மீண்டும் மனதுள்ளே அடங்கிப் போகிறது அவளுக்கு.

சாலையிடையே ஒரு முச்சந்தியில் பேரூந்து நிற்கிறது. பயணிகள் சிலர் இறங்கியதும், அவள் மேலே ஏறி, ஒரு இருக்கையில் அமர்ந்து கொள்கிறாள்.

பயணிகள் இறங்கிய இடத்தில் மீண்டும் வேறு பயணிகள் ஏற்றப்பட்ட நிலையில், புறப்பட்டுச் செல்கிறது பேரூந்து.

இப்பொழுது பேரூந்து பழையபடி... சனவெக்கைக்குள் மூழ்கித் திணறுகிறது. அவளருகில் ஒருவன்... நின்ற நிலையில் மேலே பிடிக்கம்பியில் ஒருகையைப் பிடித்தபடி... மறுகையை அவள் இருக்கும் இருக்கையின் விளிம்பினை அணைத்தபடி... அவளது தோள்பட்டையில் தனது வயிற்றின் அடிப் பகுதியைச்சற்று சாய்த்தபடி... சீரற்றசாலையில் பேரூந்து ஆட்டம் போட்டு ஓடிக்கொண்டிருக்க, அவனும் ஆடிக் கொண்டிருந்தான் சற்று உரசலாக.

அவளால் அந்த அருவருப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் தன் முதுகை சற்று முன்பாக வளைத்து முன்சீற்றோடு ஒன்றியபடி இருந்தாள். அப்படியிருந்தும், அரியண்டம் நின்றபாடாயில்லை. அவளுக்கு அழுகை வந்தது. தலையைத் திருப்பி பேரூந்தின் யன்னலூடாக வெளியே தெரியும் காட்சிகளை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'எனக்கேன் இந்த நிலை...? பேசாமல் வீட்டோடை நிண்டிடலாம்...'

மறுகணம்–

தனது குடும்பத்தின் வறுமைநிலை மனதில் பளிச்சிடு கிறது அவளுக்கு.

'நமக்கென்று ஒரு காலம் உருவாகுமா? அப்படி உருவாகும் வரைக்கும் இந்த அரியண்டங்களைச் சகிக்கத்தான் வேண்டுமா? இதுக்கொரு விடிவே வராதா?'

அவள் தனக்குள்ளே பல தடவைகள் கேட்கும் கேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது. ஆயினும் பதில் கிடைக்கவில்லை இதுவரை அவளுக்கு.

பேரூந்து உரிய இடத்தில் வந்து நிற்கிறது. பயணிகள் பலரும் இறங்கிக் கொள்கின்றனர். அவர்களுடன் 'அரியண்டங்களும்' எதுவும் தெரியாத அப்பாவிகள் போன்று...

தூரத்தே அவள் தொழில் புரியும் 'பான்சி கடை' தெரிகிறது. இனி அங்கும் சில அரியண்டங்களைச் சந்தித்தாக வேண்டும், சகித்தாக வேண்டும்... என்ற எண்ணம் மேலெழ, அவளிடமிருந்து வெளிப்படுகிறது அனல் நிறைந்த பெருமூச்சொன்று.

மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பும் பொழுதில் மீண்டும்...

அதே அரியண்டங்கள்...

அதே சொறி நாய்கள்...

சுழலும் வாழ்க்கைச் சக்கரத்தினுள் அவளைப் போன்று எத்தனை சுமைதாங்கிகள்...

மனதுள் சோகத்தை மட்டுமல்ல, அருவருப்புக்களைச் சகித்தபடி...

அன்றாடம் சுமந்தபடி...

- தினமுரசு வாரமலர் : 03-05-2012.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாத்தை

**பொ**ன்னுப்பிள்ளை என அழைக்கப் படும் 'பொன்னாத்தை' காலமாகி விட்ட செய்தியை, அந்த முற்பகல் வேளை ஊரெங்கும் பரப்பிக் கொண்டிருந்தது பறையொலி.

'ஒருமாதமாகப் படுக்கையில் கிடந்து அழுந்தின சீவன், ஒரு மாதிரியாகப் போய்ச் சேர்ந்திட்டுது...' என்ற உள் மனச் சிந்தனை களோடு, உரத்த குரலில் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தன பொன்னாத்தையின் உதிரத்து உறவுகள். மூன்று தலைமுறை களைக் கண்டு கொண்டு பொன்னாத்தை யின் கடைசிக் காலம்...?

'ஆ... பாழ்பட்ட கடவுள்... வேளைக்கே என்னைப் பாடையில கொண்டு போய்ச் சேர்க்கிறானில்லையே...?' என்று ஆதங்கப் படுவதான பல சந்தர்ப்பங்கள் கிழவிக்கு ஏற்பட்டிருந்த போதிலும், அதை வார்த்தை களாக வெளிக் காட்டும் துணிவு அவளுக்கு ஏற்பட்டதில்லை.

தனித்துப் போனதான சூழ்நிலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள், மனதுள் உருவாகும் பலவித உணர்வுகளையும் வார்த்தைகளாக வெளியே மனம்விட்டு மற்றவர்களுடன் பகிர முடியாத நிலையில், அவற்றைத் தனக்குள்ளே அமுக்கி... அமுக்கி... அதுவே அவளது மனநிலையைப் பாதித்த ஒரு வியாதியாகி... ஒருமாதம் வரைக்கும் படுக்கையில் கிடந்தவள், புலருமொரு பொழுதுக்கு முன்பதாகப் போய்ச் சேர்ந்து விட்டாள்.

இழவுவீடு களைகட்டிக் கொண்டிருந்தது. பந்தல் போடுபவர்கள் ஒருபுறம்... பாடை கட்டுவதற்கான ஆயத்தங் கள் மறுபுறம்... இவற்றிற்கிடையே சுருட்டு மற்றும் வெற்றிலை வாய்களில் இருந்து வெளி வந்து கொண்டிருக்கும் உயர்மட்ட; அடிமட்ட, சமூக, அரசியல், பொருளாதாரம் சார்ந்த சம்பாஷணைகள்... விவாதங்கள்... ஒப்பாரி ஒலிகள்... பலதெனவாய் காட்சி அளித்துக் கொண்டிருந்தது இழவு வீடு.

இறந்து கிடக்கும் பொன்னாத்தைக்கு மொத்தம் ஒன்பது பிள்ளைகள். அவளது கணவன் ஊரிலே பெயர்பெற்ற ஒரு கமக்காரன். அலுப்பு; களைப்பு என்ற வார்த்தைகளே அவரது வாயிலிருந்து வெளிவராத ஓர் உழைப்பாளி. ஆசாரம், அளவான உணவு, ஆன்மிக ஈடுபாடு போன்றவற்றோடு அமைதியான குணவியல்புகளுடன்... அவர் தனது பிள்ளை கள் அனைவருக்கும் நல்ல முன்னேற்றகரமான வாழ்க்கைக்கு வழி அமைத்துக் கொடுத்துவிட்டு, தன் பணி முடிந்ததென்ற நிறைவுடன் கண்களை மூடிக்கொண்டு விட்டார்.

பிள்ளைகளும் அவரவர்க்குரிய இடங்களில் கிளை விருட்சமாகப் பரவி நின்ற போதும், பொன்னாத்தை தனது மூத்த ஆண்மகனுடனே இருக்கச் சம்மதித்துக் கொண்டாள்.

காலச் சுழற்சியில் நாட்டில் அசாதாரண சூழ்நிலைகள் தென்பட்ட போது, கிழவியின் பிள்ளைகள் ஐந்துபேர் தங்களுக் கான வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தி, வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். அவர்களது பிள்ளைகளும் தங்களுக் கான வாழ்க்கையை அங்கேயே அமைத்துக் கொண்டதோடு, தாம் பிறந்த நாட்டின் உறவுமுறைகளிலிருந்தும் சமூகப் பழக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கத்திலிருந்தும் மெல்ல விடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஏதோ அவ்வப்போது "அம்மம்மா" "அப்பம்மா" என்ற உறவுமுறையின் நிமித்தம் பணம் அனுப்புவார்கள். போனிலும் கதைத்துக் கொள்வார்கள். இறுதியில் அதுவும்... கழுதை தேய்ந்த கதையாகிப் போனது.

கிழவிக்கு வெளிநாட்டில் வசிக்கும் தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் முகங்களை நேரடியாகப் பார்க்க வேண்டுமென மனம் அவதிப்பட்டுக் கொள்ளும்.

ஒருதடவை அவள் தனது மனவிருப்பத்தை தன் மகனிடம் தெரிவித்த போது... அதற்கு மகன் கூறிய அந்தப்பதில்...?

"நீ... என்ன நினைப்பிலையணை இருக்கிறாய்? இப்ப நாட்டு நிலைமை சரியில்லை. இதுக்குள்ளை நீ வேறை... பேசாமல் வாயை மூடிக் கொண்டிரு. பிறகு பார்ப்பம்..."

கிழவி அன்றிலிருந்து வெளிநாட்டிலிருப்பவர்களைப் பற்றி எதுவும் கேட்பதுமில்லை; கதைப்பதுமில்லை. பிள்ளைகளின் நினைவு மனதை ஆக்கிரமிக்கும் பொழுதுகளில், அவள் யாருக்கும் தெரியாமல் தனக்குள்ளே அழுது விட்டு அமைதியாகி விடுவாள்.

உடுதுணிகள்... சாப்பாட்டு வகைகள்... விதம் விதமாக, வேளாவேளைக்கு அவளுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தன. ஆயினும், தன் உதிரத்திலிருந்து உருவான உறவுகளையும், அதன் பரம்பல்களையும் தன்னால் பார்ப்பதற்கு முடியவில்லையே... என்ற மன ஆதங்கம் அவள் மனதை நாளாந்தம் அரித்துக் கொண்டே இருந்தது.

இருப்பினும், ஊரோடு ஆங்காங்கே இருக்கும் மற்றைய பிள்ளைகளின் முகங்களும் தரிசனங்களும் கிழவிக்கு சற்று ஆறுதலைக் கொடுத்துக் கொண்டிருந்தன.

நாட்கள் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. பொன்னாத்தையின் உடல்நிலை மெல்லத் தளர்வடையத் தொடங்கியது. அவளது பிள்ளைகளின் வாழ்வியலிலும் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. கணவனுடன், தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த காலத்தில் அவர் தன் பிள்ளைகளை எவ்வளவு அன்பான கண்டிப்போடும், கட்டுக்கோப்புடனும் வளர்த்தார்... என்பதை எண்ணிப் பார்க்கும் போது கிழவிக்கு மனக் குமைச்சலோடு அழுகையும் வெளிப்பட்டுக் கொள்ளும்.

நாகரிகம் என்ற போர்வையில் பேரப்பிள்ளைகளின் வெளியலங்காரத்தோற்றப்பாடுகளைப் பார்த்து கிழவி முகம் சுழிக்கத் தொடங்கினாள். அவர்கள் அணிந்து கொள்ளும் உடைகள் குறித்து, ஒருநாள் அவள் தனது பேத்தி ஒருத்தியிடம் தன் மனதில்பட்ட கருத்துக்களை மென்மையாக வெளிப் படுத்தியபோது, பேத்தியின் முகம் சிவந்து விட்டது மட்டுமல்ல, அன்றைய தினம் அந்தவீடே இரண்டு பட்டு விட்டது.

"அவ கிடந்தா... விசர் மனிசி! பழைய பஞ்சாங்கம். நீ பேசாமல் இரு புள்ளை..."

கிழவியின் மூன்றாவது மகள் கூறிக் கொள்கிறாள்.

அந்தக் குடும்பத்தில், தான் ஒரு மூத்த பெண்மணி என்ற மரியாதைக்குரிய எண்ணங்கள் அக்கணமே அவளுக்குள் சுக்கு நூறாகி விட்டன. இதன் நிமித்தம் அவள் தன் பிள்ளைகளுக்கு முன்பாக மீண்டும் அவமானப்படும் நிலைக்கு ஆளாக விரும்பாமல், தனக்கென்று ஒதுக்கப்பட்ட அறைக்குள்ளேயே முடங்கி வாழத்தலைப்பட்டாள். இறுதி மூச்சு விடும் வரைக்கும் கிழவிக்கு அந்த அறையே உலகமாகவும் உறவுகளாகவும் ஒட்டிக் கொண்டு இருந்துவிட்டன.

பறையொலி உரத்து ஒலித்த வண்ணமிருந்தது. வீட்டின் முன்தெருவில் நிற்கும் ஆட்டோ ஒன்றின்மேல் கட்டப் பட்டிருந்த ஒலி பெருக்கியினூடாக கிழவியின் இறப்புக் குறித்து 'மரண அறிவித்தல்' வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. மக்கள், மருமக்களது உத்தியோக, ஓய்வுபெற்ற மற்றும் உயர்நிலைப் பதவிகளும், பேரப்பிள்ளைகள் கல்விபயிலும் உயர்நிலைப் பாடசாலைகளின் பெயர்களும் கிழவியின் இறப்பினூடாக விளம்பரப்படுத்தப்பட்டன.

இவற்றோடு வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளை களுக்குத் தாயின் இறுதி நிகழ்வையும் ஊர்வலத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பிப்பதற்காக இந்நிகழ்வுகளை வீடியோ மூலம் பதிவு செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேரம் மதியத்தைத் தாண்டி... பிற்பகலாகிக் கொண்டிருந்தது. கிழவியின் பிள்ளைகள் அழுதழுது... பந்தலின் கீழ் களைத்துப் போய் இருந்தார்கள். பந்தலைச்சுற்றி ஆங்காங்கே வெற்றிலைத்துப்பல்கள், குறைச்சுருட்டுக்கள், பீடித்துண்டுகள்... என்பன பரவியிருந்தன. இழவு வீட்டுக்கு வந்து முகம் காட்டிய மனநிறைவோடு சிலர் வெளியேறிக் கொண்டிருந்த அந்த நேரத்தில், வீட்டின் பின்புறம் பிணத்திற்கு குளிப்பாட்டும் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அலங்காரம் நிறைந்த விலை உயர்ந்த ஒருபெட்டியில் கிழவியின் உடல் கிடத்தப்பட்டு, மீண்டும் பந்தலுக்குக் கொண்டு வரப்பட்டபோது, மீண்டும் ஒலிக்கத் தொடங்கின ஒப்பாரிகளும்... ஓலங்களும். பிணத்திற்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று முடிந்தபின், இளைஞர்கள் சிலர் பெட்டியைத் தூக்கிக் கொண்டார்கள்.

பொன்னுப்பிள்ளை எனும் 'பொன்னாத்தை' தனது எண்பத்தாறு வருட வாழ்வெனும் பயணத்தை முடித்துவிட்டு... போய்க் கொண்டிருந்தாள் அக்கிராமத்தின் தெருக்களூடாக ஊர் எல்லையில் உள்ள சுடுகாடு நோக்கி...

இன்று பொன்னாத்தையின் வருடாந்தத் திவச நாள்!

மூன்று வருடங்களின் பின்பு, அவள் வாழ்ந்த வீடு கலகலப்பான தோற்றப்பாட்டுடன் காணப்பட்டது. ஹோலில் உயரமான ஒரு மேசையின்மீது அழகான ஒரு கண்ணாடிப் பிரேமுக்குள் வெள்ளைச் சேலையுடன்... தோல் சுருக்கம் விழுந்த முகத்துடன் காட்சியளித்துக் கொண்டிருந்தாள் பொன்னாத்தை.

பிரேமின் இருபக்கத்திலும் குத்து விளக்குகள் இரண்டு சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தன. படத்தின் முன்னே பல விதமான பூக்கள்... அதன் நடுவிலிருந்த ஊதுவர்த்திகள் சில தங்களை எரித்துக் கொண்டிருந்தன. அதன் நிமித்தம் எழும் நறுமணம் அந்தக் ஹோல் எங்கும் வியாபித்தபடி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நேரமாக அந்தப் படத்தை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான் ஓர் ஆறுவயதுச் சிறுவன். அவனுக்கு அந்தப்படத்தில் இருப்பது யார் என்பது புரியவில்லை.

அதே நேரம் -

"டிக்டோக்(டிசோக்) எங்க நிற்கிறீங்க...?" என்று கேட்டபடி ஒரு பெண் அச்சிறுவனருகில் வந்து நின்றாள். சிறுவன் அப் பெண்ணைத் திரும்பிப் பார்த்து விட்டு, தனது சுட்டுவிரலால் மேசையில் வைக்கப்பட்டிருந்த புகைப்படத்தைக் காட்டினான்.

"ஓ... அதுவா...!" என்று வியப்புத்தொனிக்கக் கூறிய அந்தப் பெண், அச்சிறுவனைத் தூக்கி தன் கைகளில் வைத்துக் கொண்டு, மீண்டும் கூறினாள்.

"அது பிள்ளையின்ர மம்மியின்ர, மம்மியின்ர மதர்! நாங்க கனகாலம் ஒஸ்ரேலியாவில இருந்ததால, பிள்ளேன்ர அம்மம்மான்ர அம்மாவைப் பார்க்கேலாமல் போச்சுது..."

சிறுவனுக்கு தனது தாய் கூறிய உறவுமுறை விளங்கவில்லைப் போலும். அவன் அந்தக் கண்ணாடிப் பிரேமை மீண்டும் உற்றுப் பார்க்க, அவள் சிரித்துவிட்டு, சிறுவனோடு வீட்டின் வேறொரு புறத்திற்குச் சென்று மறைந்தாள்.

தனது வயிற்றிலிருந்து உருவான ஒருதலைமுறை, தனது குடும்பத்துக்கேயுரிய பண்பாட்டு வழக்கங்களிலிருந்து பிறழ்வுற்று வந்து நிற்பதை அறியாதவளாக... கண்ணாடிப் பிரேமுக்குள்ளிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் பொன்னுப் பிள்ளை எனும் 'பொன்னாத்தை'!

- தினமுரசு வாரமலர் : 07-02-2013.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுதலும் வேண்டாமையும்

வரட்சியின் உச்ச வெளிப்பாடாய் ஆங்காங்கே பாளம் பாளமாய் வெடித்துக் கிடந்த நிலம், வானம் பொழியும் மழைநீரை இன்முகத்துடன் வரவேற்றுக் கொண்டிருந்தது. கொட்டுகின்ற நீரனைத்தையும் நிலம் உறிஞ்சிக் கொண்டிருப்பதை குடிசை வாசல் அருகோரம் குந்திக் கொண்டிருந்தவாறு... கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் கனகம்மா.

"கடவுளே! இப்போதைக்கு மழை வேண்டாம்..."

ஆகாயத்தில் மேகங்கள் கருமை கொண்டு, குளிர் காற்று வீச ஆரம்பிக்கும் போதிலெல்லாம்... அவளது வேண்டுதல் அதிகமாகவே இருக்கும்.

"கடவுளே! தற்காலிக வீடு கிடைக்கும் வரைக்கும் இப்போதைக்கு மழையெதுவும் வேண்டாம். மழை பெய்யத் தொடங்கினால் என்ர வீடு தாங்காது. நீதான் காப்பாத்த வேணும்."

அவளது வேண்டுதல் அனைத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்த்துப்போன நிலையில்... இப்போது வானம் கொட்டிக் கொண்டிருந்தது மழைநீரை.

இடம்பெயர்ந்தோர் முகாமிலிருந்து சொந்த இருப்பிடத்திற்கு மீள்குடியேற்றமாக வந்து, மாதங்கள் பலதெனவாய் ஆகிவிட்ட பொழுதிலும், அவளுக்குத் தற்காலிக வீடு இன்னமும் கட்டிக் கொடுக்கப்படவில்லை.

வீடு இன்னமும் கிடைக்காததற்கு காரணங்கள் பல கூறப்பட்டன அடுத்தடுத்து அடுக்கா!

மழையின் வேகம் அதிகரிக்கத் தொடங்கியது.

வானம் பொழிந்த நீரை உறிஞ்சிக் குடித்துவிட்ட திருப்தியில் இப்பொழுது நிலமானது தனது மேனியை நீரினால் கழுவிக் கொண்டிருந்தது.

தரப்பாள் கொட்டிலின் முன்பாக தரையை மேவி ஓடிச் செல்லும் வெள்ளநீரைப் பார்த்து விட்டு, தனது கொட்டில் வீட்டை நிமிர்ந்து நோக்கினாள் கனகம்மா.

தரப்பாள் மீது விழும் மழைத்துளிகளின் ஒலி கனதியாக இருந்ததோடு, ஆங்காங்கே அதனிலிருந்து நீர் கசிந்து ஒழுகவும் செய்தது. மழைச்சாரல் காற்றோடு கொட்டில் வாசலை நோக்கி அடித்த போது... அவள் திடீரென எழுந்து ஓலைத்தட்டியை இழுத்து வாசலை மூடிவிட்டு, கொட்டிலுக்குள் முடங்கிக் கொண்டாள்.

சில மாதங்களாக ஊரெங்கும் நிலவி வந்த வரட்சியின் தாக்கத்தை அவள் உணர்ந்திருந்தாள். பல இடங்களில் உள்ள நீர்நிலைகளில் தண்ணீர் வற்றி விட்டதில், மக்கள் குடிநீருக்கு அலைந்து திரிவதையும், கால்நடைகள் நீரின்றி இறந்து மடிவதையும், பூமிவாழ் மனிதவிழிகள் வானம் பார்த்த நிலையில் ஏக்கத்துடன் இருப்பதையும் அவள் அறியாதவள் அல்ல.

தன் வளவில் உள்ள கிணறு கூட, நீரின்றி வரண்டு விட்ட பின்பு, குடிநீருக்காக அவள் நான்கு வீடுகளுக்கு அப்பால் உள்ள ஒரு வீட்டிற்குச் சென்று அள்ளி வருகிறாள்.

இந்நிலையில் –

ஒரு குடம் தண்ணீருக்காகத் தனக்கு ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமத்தை விட, மழைபெய்வதால் தரப்பாள் கொட்டிலுக்குள் ஏற்படும் அசௌகரியங்களை அவள் நினைத்துப் பார்க்கிறாள்.

மழை கொட்டும் பொழுதில் பலமாக வீசும் காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பறக்க முனையும் தறப்பாள்...

நீண்ட நாட்களாக வெயிலில் கிடந்து, அதன் பாவனைக்காலம் கடந்து விட்டநிலையில், பல இடங்களில் ஏற்பட்டுள்ள வெடிப்புக்களூடாக ஒழுகும் மழைநீர்...

வீட்டுக்கொட்டிலைச்சுற்றி தேங்கி நிற்கும் வெள்ள நீரின் நிமித்தம்... வீட்டுக்குள் ஏற்படும் நீர்க்கசிவு...

கொட்டிலைத்தாங்கி நிற்கும் சாதாரண தடிகளின் அடிப்பாகங்களைக் கறையான் அரித்துக் கொண்டு நிற்பதால், ஈரலிப்பில் கொட்டில் எந்த நேரமும் பாறி விழும் அபாயம்...

தற்காலிக வீடு கிடைக்கும் வரைக்கும் மழை பெய்வதைக் கனகம்மா விரும்பவில்லை.

"கடவுளே! பெய்த மழைகாணும்! இந்தளவத்தோடை நிற்பாட்டு. கொட்டில் பாறினால் என்னால திருப்பிக் கட்ட ஏலாது. ஆம்பிளைத் துணையில்லாத எனக்கு ஆர் உதவி...? என்ர கடவுளே! எனக்காக வெண்டாலும் இந்த மழையை நிற்பாட்டு".

ஒரு குழந்தையின் மனநிலையில் இருந்து, மன்றாடிக் கொண்டிருந்தாள் அவள் தன் மனதுக்குள்.

ஆயினும் -

மழையோ நின்றபாடில்லை. அது சோ... வென இரைந்தபடி... கொட்டிக் கொண்டிருந்தது நீர்த்துளிகளைப் பெருவாரியாக!

கொட்டிலுக்குள் ஒழுக்கு விழும் இடங்களில் வைத்த சட்டிகள், சருவப் பானையிலிருந்து நீர் நிறைந்து வருவதை அவதானித்த கனகம்மா, அவற்றை எடுத்து வெளியே ஊற்றிய பின், திரும்பவும் பாத்திரங்களை அவ்விடத்தில் வைத்துவிட்டு, ஒழுக்கு விழாத ஓர் இடத்தில் குந்திக் கொண்டாள்.

அவளுக்குள் விரிவடையத் தொடங்கின சிந்தனைகள்.

'எனக்கு ஏன் இன்னமும் வீடு கிடைக்குதில்லை...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குள்ள எத்தனை பேருக்கு, அதுவும் வசதி வாய்ப்பு களோடை இருக்கிற ஆட்களுக்கு தற்காலிக வீடும் கிடைச்சு, இப்ப நிரந்தர வீட்டுக்கான அனுமதியும் வழங்கப்பட்ட நிலையில், எனக்கேன் இப்படியாய் போனது? ஊரோட ஒத்த அழிவுதானே எல்லாருக்கும். பிறகேன் இந்தப் பாகுபாடு? சிறுமைப்பட்டவர்கள் மீது சிந்தனையுள்ளவர்கள் மலிந்திருந் தால் வறுமைப்பட்ட வாழ்க்கையைச் சுமப்பவர்கள் இங்கெ தற்கு? ஏழ்மையென்பது இன்னொருவரின் கரிசனையற்ற செயற்பாடுகள் மூலம் உருவாகுதேயொழிய, அது அதைச் சுமப்பவர்களுக்கான விதியல்ல! சண்டைக்குள்ள என்ர புருசனும் பிள்ளைகளும் சாகாமல் தப்பியிருந்தால், நான் இந்தத் தரப்பாள் வீட்டில் வாழவேண்டிய விதி எனக்கில்லை...'

தொலக்... தொலக்... தொலக்...

கொட்டிலுக்குள் ஒழுக்கு வைத்த பாத்திரங்களில் நீர் நிறைந்த நிலையில், அதனுள் விழும் துளிகளின் ஒலிகளில் சிந்தனை கலைகிறது கனகம்மாவிற்கு.

அவள் திரும்பிப் பார்க்கிறாள்.

நீர் நிறைந்த சட்டிகளை எடுத்து, வாசல் படலைத் தட்டியைத் திறந்து, வெளியே ஊற்றி விட்டு, திரும்பவும் அவ்விடத்தில் வைத்தவள், கொட்டிலை விட்டு வெளியே வந்தாள்.

மழை பொழிவது நின்றிருந்தது. மண்ணோ நன்கு குளிர்ந்திருந்தது. ஆனால்... அவளது மனம்...?

'கடவுளே! இண்டைக்கு இந்த மழை காணும். இப்போதைக்கு வேண்டாம்...'

மீண்டும்... மீண்டும்... கடவுளிடம் நிகழ்கிறது அவளது வேண்டுதல்

மனப்பாரம் தாங்காது கொட்டியமுத நிறைவோடு, மெல்ல வெளிக்கத் தொடங்கியது ஆகாயம்.

கருமேகங்களுக்கிடையில் சில இடங்களில் நீலவானம் தெரிவது கண்டு, கனகம்மாவுக்கு மனதில் உள்ள அழுத்தம் சற்று குறைவடைய ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இனி வெளிக்கும் போலக் கிடக்குது! கடவுளே... இப்போதைக்கு மழை வேண்டாம்...'

மழை பொழிந்து ஒருவாரமாகி விட்டிருந்தது. பூமியில் உள்ள மரம் செடி கொடிகள் அனைத்தும் பச்சைத் தன்மையுடன் நன்கு மதாளிப்பாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தன. வேளாண் தொழில் செய்பவர்கள் தங்கள் வயல் நிலங்களில் உழவுத் தொழிலை ஆரம்பித்திருந்தார்கள். அதேபோன்று தோட்ட விவசாயிகளும் மிகுந்த முகமலர்ச்சியோடு தங்கள் நிலங்களைப் பண்படுத்தத் தொடங்கியிருந்தார்கள்.

இவர்களுக்கு மத்தியில் கனகம்மா...?

தரப்பாள் கொட்டிலைச் சுற்றி மழைநீர் தேங்கி நின்றதில் கறையான் அரித்த கொட்டிலின் கப்புகள் சற்று சரிந்த நிலையில் இருந்ததைக் கண்டு, மனம் பதறியவளாக குடும்ப அட்டையை எடுத்துக் கொண்டு விதானையாரின் அலுவலகத்தை நோக்கி ஓடோடிச் சென்றாள்.

அன்று புதன்கிழமையாதலால் விதானையார் ஏ.ஜி.ஏ. ஒவ்பீசில் நிற்பதாக அங்குள்ள உதவியாளர் ஒருவர் கூறினார். கனகம்மா தனது நிலைமையை அவரிடம் எடுத்துக் கூறிவிட்டு, திரும்பி வருகையில். அரசடிப்பிள்ளையார் ஆலயத்தில் மதிய பூசை நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

கோவிலில் சனங்கள் குறைவாக இருந்தனர். பூசை விஷேசமாக இருந்தது. யாரோ அடியவரின் நேர்த்தி போலும்.

கனகம்மா விநாயகனை மனமுருக வேண்டினாள்.

"பெருமானே பிள்ளையாரப்பா! எனக்கு தற்காலிக வீடு கிடைக்கும் வரைக்கும் மழை பெய்யக்கூடாது. வீடுகிடைச்சிட வேணும்..."

பூசை முடிவில் பிரசாதங்களை வாங்கிக் கொண்டு திரும்புகையில், கோவிலில் நின்ற இருவரின் உரையாடல் அவளது செவிகளில் விழுகின்றன.

"என்ன தம்பி... இண்டைக்குப் பூசை விஷேசமாயிருக்கு...!"

"ஓமண்ணை... கனநாளா மழையில்லை. இந்த முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல்ல விதைப்புக்கு மழை பிந்தியிடுமோ எண்டு பயந்து போய், பிள்ளையாருக்கு நேர்த்தி வைச்சன். மனம் போல மழை கொட்டி விட்டிருக்கு! இப்ப வயல்ல விதைப்பு வேலை நடக்குது. அது தான் நேர்ந்த நேர்த்தியை செய்து முடிச்சிருக்கிறன்"

கூறிவிட்டு, அவர் மனநிறைவுடன் சிரித்துக் கொள்கிறார்.

கனகம்மாவிற்கு குழப்பமாக இருந்தது.

'விதைப்புக்காக மழை வேண்டும்... என்ற அவரது வேண்டுதல் கேட்கப்பட்டது போன்று, இருப்பதற்கு ஒரு வீடு வேண்டும்... என்ற எனது வேண்டுதலும் இறைவனிடத்தில்... இங்குள்ள அதிகாரிகளிடத்தில் எப்போது கேட்கப்படும்...?'

சிந்தனை மனதை அரிக்க, கனத்த மனதுடன் கோவிலைவிட்டு வெளியேறியவள், வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தாள் தனது தரப்பாள் கொட்டில் பாறி விழுந்த நிலை தெரியாமல்.

- தினமுரசு வாரமலர் : 04-09-2014.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சிதைவுகள்

மதிய உணவை உட்கொண்டு விட்டு, வீட்டிற்குள் படுத்திருந்தாள் புவனம். அவளுக்குப் பக்கத்தில் மகள் முதுகு காட்டியபடி... உடல் சரித்த நிலையில், ஆழ்ந்த உறக்கமாய்... அதை வெளிப் படுத்திக் கொண்டிருந்தது அவளின் சுவாச ஒலி.

புவனத்திற்கோ உண்ட களையிலும் உறக்கம் வருவதாக இல்லை. முன்னைய நாட்களில் என்றால் படுத்தவுடன் உறங்கி விடுவாள் ஆனால் இன்று...?

டி.ஆர்.சி. நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட தற்காலிக தகர வீட்டின் முகட்டுக் கூரையைப் பார்த்த நிலையில், மதியத்துக்கு முன்பு குசினிக்குள் சமைக்கும் போது, மகளோடு தர்க்கப்பட்டதும் தகாத விதமாய்ப் பேசியதும் அவளுக்குள் மீண்டும், மீண்டும் சுனாமி அலை போன்று...

மகளின் பிடிவாதம் தாய்க்கு சினத்தை உண்டுபண்ணிவிட்டிருந்தது. எத்தனை தடவை சொல்லிப்பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாள். மகளோ தன் பிடிவாதத்திலிருந்து சற்றும் பின் வாங்குவதாக இல்லை.

'சனியன்! மூதேசி... பத்தோடை பதினொண்டா எக்கேடு கெட்டெண்டாலும் துலைஞ்சு போ...'

மகளென்றும் பாராது மனதுக்குள் திட்டிக்கொள்கிறாள் ஆற்றாமை மிகுந்த எரிச்சலோடு.

புவனத்தால் உறங்க முடியவில்லை. படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்தாள். உச்சிச் சூரியன் இறங்கு முகமாகிக் கொண்டிருந்ததில், முற்றத்தில் படர்ந்திருந்தது தென்னை மர ஓலைகளின் நிழல்! நிழலின் நடுவில் இறப்பர் கதிரையைப் போட்டுவிட்டு, அதில் அமர்ந்திருந்தவாறு தெருவினை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

தெருவில்.... பாடசாலை நேரம் முடிவடைந்து மாணவிகள் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

இப்படித்தானே அந்த நேரம் என்ர பிள்ளையளும்...

அவளுக்கு மனம் குமையத்தொடங்கியது. துக்கத்தின் உச்ச வெளிப்பாடாய் இருவிழிகளிலும் நீர்த்துளிகள் சுரந்து... விழிகளின் விளிம்பில் நின்று... விழுவதற்கு ஆயத்தமாகி நின்றன.

தன் சேலைத்தலைப்பினால் அழுநீரைத் துடைத்த வளிடமிருந்து வெளிப்படுகின்றது வெப்பப் பெருமூச்சு!

புவனம், கனகலிங்கத்தைக் கரம்பிடித்ததிலிருந்து அவர்களுக்குப் புத்திர பாக்கியம் குறைவில்லாமல் இருந்தது. அவர்கள் இருவரும் வாழ்ந்த ஊரில் பிள்ளைகள் அற்ற தம்பதியினர் சிலர் பொறாமைப்படவும், உறவினர்கள் பெருமைப்படவும் வைத்தது அவர்களின் சந்தானவிருத்தி! புவனம் கனகலிங்கம் தம்பதியினருக்கு மொத்தம் பதினொரு பிள்ளைகள். மூன்று ஆண்வாரிசுகளோடு ஏனையவர்கள் பெண்களாகப் பிறந்திருந்தார்கள்.

கனகலிங்கத்திற்கு கடற்றொழிலை விட, வேறு எதுவும் தெரிந்திருக்கவில்லை. பொழுது சாயும் வேளை படகெடுத்து கடலுக்குச் சென்றால், மறுநாள் காலையில் தான் மீன்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார். வாடியில் நிற்கும் வியாபாரிகளிடம் மீன்களைப் பேரம் பேசிவிற்றுவிட்டு, வீட்டிற்கு வந்து குளித்து உடைகளை மாற்றி விட்டு காலை உணவை முடித்துக் கொண்டு, அவர் நேரே செல்வது கள்ளுத் தவறணைக்கு! அங்கிருந்து பின் வீடு திரும்ப நேரம் மதியமாகிவிடும். மனைவி கொடுக்கும் உணவை உண்டு விட்டு, உறங்கச்சென்றால் தொழிலுக்குச் செல்லும் நேரத்துக்குச் சற்று முன்பாக எழுந்து விடுவார்.

இப்படியாக... தொழிலும், கடலும், வீடுமாக அவரது காலம் நகர, மனைவி புவனம் குடும்பத்தையும் நிர்வகித்து, பிள்ளைகளின் தேவைகளையும் கவனித்துக் கொண்டிருந் தாள்.

தொண்ணூறுகளில் இடப்பெயர்வு ஏற்பட்ட பொழுது, அந்தக்கடற்கரை வாழ் மக்கள் அனைவரும் வன்னிக்கு இடம் பெயர்ந்து போனார்கள். காலத்தின் சூழ்நிலையாலும், சந்தர்ப்ப வசத்தாலும் அவர்களின் பிள்ளைகளில் இருபெண்களும் ஒரு ஆண்பிள்ளையும் மண்ணுக்கு ஆகுதியாய்ப் போன பின்பு, ஆட்டம் காணத் தொடங்கியது அக்குடும்பம்.

ஒரு வருடத்துக்குள் அடுத்தடுத்து நிகழ்ந்த பிள்ளை களின் சாவு கனகலிங்கத்தை கனக்க யோசிக்க வைத்தது.

இதன் விளைவு-

கால் ஒன்று இயங்காத நிலையில் அவர் படுக்கையில் முடங்கிப் போனார். குடும்பத்தலைவன் செயலற்றுப் போனதும் பிள்ளைகள் வேலைக்குப் புறப்பட்டார்கள்.

மூத்தவள் தையல் பழகப்புறப்பட்டாள், இரண்டாமவள் 'பான்சி' கடையில் வேலை பார்க்க ஆரம்பித்தாள், இன்னொருத்தி, தான் விரும்பியவனுடன் ஓடிப்போனாள். ஆண் பிள்ளைகளில் ஒருவன் பலசரக்குகடையிலும், இன்னொருவன் பொதுச்சந்தையிலுள்ள மிதிவண்டிப் பாதுகாப்பு பிரிவிலும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். மாதவருமானத்தில் நாலில் ஒரு பங்கு தாயிடம் கொடுக்கப்பட்டது. பொருளா தாரத்தடையால் பொருட்களின் விலையுயர்விற்கு அந்த நாலில் ஒருபங்கு போதுமானதாக இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும்-

குடும்பத்திற்குள் ஏற்படத்தொடங்கின குழப்பமும் கூச்சல்களும்.

குடும்பத்தலைவனோ தனது கையாலாகா நிலையை யெண்ணி படுக்கையிலிருந்தவாறு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தான்.

இந்நிலையில்-

உறவினர் ஒருவரின் ஒத்தாசையுடன் அக்குடும்பத்தி லுள்ள பெண்பிள்ளையொன்றுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஆறுமாதம் வரை வெளி நாட்டுப்பிள்ளையோடு கொண்டிருந்த உறவும் மெல்ல நசி வடைந்து... இறுதியில் எல்லாமே அற்றுப்போய்விட்டன.

ஒருநாள் –

பிள்ளைகள் யாவரும் வேலைக்குச் சென்ற நிலையில், கனகலிங்கம் தன் மனைவியைக்கூப்பிட்டு தனக்குப்பக்கத்தில் அமரும்படி கூறினார். புவனம் எதுவும் புரியாதவளாக அவருக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தாள்.

"இஞ்சை பாரப்பா! உப்பிடியே உந்தப் பெட்டையளை வெச்சிருந்தால் எங்களுக்கு மரியாதை இல்லை. அதுகளும் தாங்கள் உழைக்கிறம்... எண்ட வீம்பில ஒண்டுக்கொண்டு அடி படுகுதுகள். மூத்தவளை எங்கையெண்டாலும் கரைசேர்த்து விட வேணும். இதுக்கு எங்கட இனம் சனம் சாதிதான் தேவை யெண்டில்லை. ஆரெவன் பொருத்தமாக வாறானோ அவனுக்குக் கட்டிக்குடுத்து விடுவம்..."

"அதுக்கிப்ப காசுகளுஞ்சுக்கு என்ன செய்யிறது...?" திருப்பிக்கேட்டாள் புவனம்.

"வெளியிலை இருக்கிறவளைக்கேட்டுப் பாப்பம்..."

"சரி... உங்கடவிருப்பம்..." அவள் கூறிவிட்டு பலத்த யோசனையுடன் எழுந்து போனாள்.

சுமார் எட்டுமாதங்களின் பின்... மூத்த பிள்ளைக்கு புறோக்கர் பேசிவந்த மாப்பிள்ளையை எல்லோருக்கும் பிடித்துவிட, திருமணமும் நடந்து முடிந்து விட்டது. கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடங்கி படுக்கையில் கனகலிங்கம் விழுந்த பிற்பாடு, 'வக்கில்லாதவர்கள்' என்று ஒதுக்கிய உறவினர்கள் பலர், அக்குடும்பத்தில் நடைபெற்ற திருமணத்தின் பின்பு, 'சுளை பிடுங்க' ஒவ்வொருத்தராக வரத்தொடங்கினார்கள்.

காலநகர்வில்... மூத்தவளுக்குப்பின் மூன்று பெண் சகோதரிகளுக்கும், ஓர் ஆண் சகோதரனுக்கும் திருமணம் நடந்து முடிந்து விட்டது. போரின் உச்சத்துள் கனகலிங்கம் எறிகணை வெடிப்பில் இறந்தபோது, ஆண் சகோதரன் ஒருவன் பயிற்சிக்காக பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு... பின்பு காணாமல் போனான். மற்றவனுக்கு தொடையில் எறிகணைத் துண்டொன்று இன்னமும் எடுக்க முடியாத நிலையில்... கடின மான வேலைகளைச் செய்யக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந் தான்.

கனத்த சூறாவளிக்குள் காட்டு மரங்கள் அகப்பட்டதைப் போன்று... கனகலிங்கம் குடும்பம் மாறிப்போனது. தங்களுக் கான வாழ்க்கையினை அமைத்துக்கொண்ட குடும்பங் களுக்குள்ளும் பிரச்சினைகள் தலைவிரித்தாடத் தொடங்கின.

'பதினொண்டைப் பெத்து இந்தப்பாவி என்னத்தைக் கண்டாள் பாடையில போக...?' என புவனமோ எதுவும் செய்யமுடியாதவளாய்... கையறு நிலையில் கலங்கி நின்றாள்.

மூத்தவளின் திருமணத்தின்போது வலியவந்து ஒட்டிக்கொண்ட உறவினர்கள், அக்குடும்பம் மீண்டும் வறுமை நிலைக்கு வந்து அல்லற்படுவதை அறிந்து, மெல்லத் தங்கள் முகங்களை மறைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள்.

இன்று புவனத்தோடு எஞ்சியிருப்பது கடைசிப் பெண் பிள்ளை மட்டுமே. அவளையும் ஓர் இடத்தில் கரைசேர்த்து விட்டால் நிம்மதியாகப் போக வேண்டிய இடத்துக்குப் போய் விடலாம்... என நினைத்துக் கொண்டிருந்த அவளுக்கு, மகளின் பிடிவாதம் மனதுள் எரியுணர்வையே ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

இருப்பினும்–

மகளின் மனநிலையிலிருந்து பார்க்கும் போது, தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளுக்கு மனச்சிதைவு ஏற்பட்டு விட்டதை புவனத்தால் ஓரளவு விளங்கிக் கொள்ளமுடிகின்றது.

மூத்தமகளுக்கும் மருமகனுக்கும் குணத்தில் ஒத்துப் போகாத தன்மையால் அக்குடும்பத்தில் ஏற்படும் கொந்தளிப்பு...

இரண்டாவது மகளின் கணவன் ஒரு பொறுப்பு மில்லாமல் உழைக்கும் பணத்தில் கடைச்சாப்பாடும்.... பீடித்துண்டுமாக...

இன்னொருத்தியின் கணவன் குடிகாரனாக...

மற்றவளின் குடும்பத்திற்குள் சீதனம் போதாதென்ற பிரச்சினை....

வெளிநாட்டில் இருப்பவளை விரும்புவதாக போக்குக் காட்டி, அவளிடமிருந்த பொன் நகைகளைத் திருடிச்சென்ற அங்குள்ள ஒருவன்...

தன் கண்முன்னாலேயே தனது சகோதரிகளின் வாழ்க்கை எப்படிச் சீரழிகிறது... என்பதைக் கண்டு கொண்டதாலேயே தனது மகள் திருமணம் என்ற பந்தம் வேண்டாம் என்று நிற்பதைப் புவனத்தால் புரிந்து கொள்ள முடிந்தாலும், தான் உயிரோடு இல்லாத காலம் தனது மகளின் நிலை குறித்து கலங்கினாள்.

"குணம் பொருந்தாத ஒரு குடிகாரன் பீடித்துண்டோடை வந்து சீதனம் காணதெண்டு பிரச்சினைப்பட்டால் நான் என்ன செய்யிறது? எனக்காகக் கதைக்க ஆர் இருக்கினம்? என் மனசைப்புரிஞ்சு என்னை மனதார ஏற்பவன் வரும் வரைக்கும் எனக்கு வேண்டாம் இந்த விபரீதம்...."

கடைசிமகள் திரும்பத்திரும்பக் கூறிய வார்த்தைகள்... இப்பொழுதும் புவனத்தின் மனதுக்குள் எதிரொலித்துக் கொண்டிருந்தன திரும்பத் திரும்ப!

- ஜீவநதி : ஐப்பசி 2014.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனப் பார்வைகள்

அவனுக்கு வேலை கிடைத்து விட்டது! நீண்டநாள் கனவு நிறைவேறியதில் மனது குதூகலம் கொண்டிருந்தது. அந்த குதூகலமானது அவனிடத்தில் மட்டுமல்லாது, அவனது மனைவி மற்றும் பிள்ளையிடமும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

"அப்பா... சம்பளம் எடுத்துக் கொண்டு வரேக்கை எனக்கு இறுங்குப் பொரி உருண்டை கட்டாயம் வாங்கிக் கொண்டு வந்து தாங்கோ..."

அவனது சின்னமகள், செல்லம் ஒழுக... அவனின் முன் நின்று கேட்கிறாள்.

"ஓம் குஞ்சு... கட்டாயம் மறக்காமல் பிள்ளைக்கு வாங்கிக் கொண்டு வருவன்..." கூறியபடி... அவன் தன் செல்லமகளை நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறான். அதனூடே பனிக்கும் கண்களுடன் தடுமாற்றமடையும் வார்த்தைகள்...

அப்பாவுக்கு வேலை கிடைத்து விட்டது! இனிவரும் நாட்களில் தனக்கு விருப்பமான இறுங்குப் பொரி உருண்டை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரீச்சம் பழம், மஞ்சள் கடலை... போன்ற உணவுப் பண்டங்களை அவர் வாங்கிக் கொண்டு வருவார்... என்ற எண்ணங்களின் பூரிப்போடு, தந்தையின் இருகரங்களுக்குள் அடங்கிக் கிடக்கும் மகளின் முகத்தில், மேலும் உவகை உணர்வுகளின் வெளிப் பாடுகள்!

அந்த அன்பு மயமான அணைத்தலின் சுகத்துக்குள், அவனின் சிறுதளிர் அதிலிருந்து விடுபட விரும்பாத நிலையில், மேலும் கட்டுண்டு கிடந்தது.

'இனி என்ன கஷ்டம் வந்தாலும், ஆர்... எவர் எப்படித் தூற்றினாலும் குடும்பத்துக்காக... அதுவும் என் மகளுக்காக எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு, வாழும் வரைக்கும் போராட வேண்டும்...' என்ற எண்ணங்கள் அரும்புகின்றன அவனுள் முளையாக! அதேசமயம் மூர்க்கமாக.

அடுத்தவரைக் கேலி செய்யும் மனப்பாங்கிலிருந்து இதுவரை எந்தவொரு மனிதனும் தன்னை விடுவித்துக் கொண்டது இல்லை. வலிகளற்ற இதயங்களோடு, வாழ் வெனும் சாலையில் பயணம் போகும் சிலரது செயற்பாடுகள், பேச்சுவார்த்தைகள் என்பன வெறும் உணர்ச்சிகளின் வெளிப் பாடே தவிர, உருக்கமான மனநிலை அல்ல. அப்படியொரு உருக்க நிலை இருந்திருக்குமானால், அவன்,தான் பணிபுரிந்த தொழிலை இடைநடுவில் உதறிவிட்டு, ஊருக்குப் போய் சேர்ந்திருப்பானா?

இன்னமும் வெக்கை தணியாத பங்குனிமாத பகல்நேர வெயில் போன்று அவன் அகத்தினுள் விரிவடைகின்றன கடந்த காலப் போர் இடர்களும்... மனம் புழுங்கிய மௌனத்தின் வெளிப்பாடுகளும்...

மாத்தளன் - கப்பல் றோட்டில் சிங்கள இராணுவம் தனது கால்களைப் பதித்து... பரவி வருவதாகச் செய்திகள் சிதறிய போது, மனம் பதறிய மக்களோடு மக்களாக அவனது குடும்பமும் அம்பலவன் பொக்கணையையும் தாண்டி... முன்னேறிக் கொண்டிருந்தது முள்ளிவாய்க்கால் நோக்கி...

இடையிடையே விழுந்து வெடிக்கும் எறிகணைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறல்களினால் கடற்கரை மணலெங்கும் பரவிக்கிடந்தன ஓடுவோர் பலரினது உடற்துண்டுகள். எங்கே என்ன நிகழ்கிறது...? என்பது கூடத் தெரியாத மனநிலைக்காளாகி... அவலப்பட்டு நின்ற மக்களிடையே அழுகை ஒன்றைத்தவிர, எஞ்சி நின்றவை எதுவுமில்லை. பலரிடம் அதுவும் கூட அடி யற்றனவாகி...

அவர்களிடையே விளிம்பில் நின்று சிரித்துக் கொண்டிருந்தது விரக்தி.

நாட்கள் நகர நகர... இறுகிக் கொண்டிருந்தன மும்முனை முடிச்சுக்கள்! முற்றுகைக்குள்ளான இடமெங்கும் வியாபித்திருந்தது இரக்கமற்ற மனோநிலை. உரத்து உண்மையைக் கதைக்கவும் மேலோங்கியிருந்தது அச்சம்! மிச்சம் மீதியாய் சுமந்து கொண்டு திரிந்த பொருட்களும், பண்டங்களும் முடிவில் முற்றுப் பெற்று, எதுவுமற்று இருந்த ஒரு நள்ளிராப்பொழுதினில், அவனருகில் விழுந்து வெடித்தது ஓர் எறிகணை!

அவனது மனைவியும் பிள்ளையும் மூடா பதுங்கு குழி யொன்றினுள் முகம் குப்புறக் கிடந்ததில் உயிர்ச்சேதமற்றுத் தப்பித்துக் கொண்டார்கள். அவர்களைப் போன்று வேறு சில பெண்களும்... அவன் மட்டும் வயிற்றிலும் கால்விரலிலும் சிறுகாயத்துடன்... கூடவே செவிப்புலனும்...

எறிகணை அருகில் விழுந்து வெடித்ததில், வெடியொலியின் அதிர்வில் பாதிக்கப்பட்டுவிட்டது அவனது செவிப்பறை. அதன் பின்... இந்தச் சமூகத்தில் அவன் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்... அவமானங்களும்...

'சே... இதைவிடச் செத்திருக்கலாம்...'

அவனுள் அடிக்கடி கிளர்ந்து கொள்ளும் அந்த உணர்வுகளால் மனம் அமைதியிழந்து, அவன் தவித்துக் கொண்டிருந்தாலும், தனது அங்கக் குறைபாட்டின் நிமித்தம், மற்றவர்களிடமிருந்து எந்தவித அனுதாப எதிர்பார்ப்புகளையும் அவன் எதிர் நோக்கிக் காத்திருக்கவில்லை.

அங்கவீனம் என்பது வன்னிப் பெருநிலப் பரப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருக்கு முகம் கொடுத்த மக்களில் பெரும்பாலானவர்களுக்கு ஏற்பட்டதொன்று!

போர் முடிந்த ஆரம்பகாலகட்டத்தில், அதனுள் அங்கவீனமாகிப் போனவர்களை ஒரு வித அனுதாபத்தோடு பார்த்த பலரும், கால நகர்வில் அருவருப்பாகவும் அலட்சியமாகவும் நோக்குவதை, அவனால் கண்டு கொள்ள முடிந்தது மட்டுமல்ல, அவனும் அப்படியான அனுபவங்களையும் பெற முடிந்தது.

கைகளால் அபிநயம் செய்து கதைகூறல்... மேசைகளில் தாளம் தட்டி விட்டு விபரம் கேட்டல்... உடம்பில் அடித்து விட்டு உரையாடுதல்... செவிப்புலன் இல்லையென்ற மன நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் பக்கத்தில் நின்றவாறே அவர்களைப் பற்றிப் பகிடிவதை கூறல்... கெக்கலித்துச் சிரித்தல்... போன்ற மனிதத் தன்மையற்ற அவர்களது செயற்பாடுகளால் அவன் மிகுந்த மனவேதனைக்கும் உள அந்தரிப்புக்கும் ஆளானான்.

பிறவியிலேயே அவன் ஒரு காதுகேளாதவன் அல்லன். இது போர் அவனுக்குக் கொடுத்த பரிசு! அவனைப் போன்ற மனம் புண்பட்டவர்களின் இழப்பின் வலிகளைப் புரியாத, இந்தச் சமூகத்தின் விரிவற்ற... விளக்கமற்ற பார்வைகளில் எவ்வளவு ஊனங்கள் உறைந்து போய்க்கிடக்கின்றன. ஒரே இனம்... ஒரே மொழி... ஒரே உணர்வு கொண்ட மானிடமாக வாழ்கின்ற போதும், வலி அறியா மனிதர்கள் தம்வதைத்தலின் உச்சமாக இந்தச் செயல்களைச் செய்ய முனைவது ஏன்?

மீள்குடியேற்றத்தின் பின்பு... அவன் ஓர் அச்சு இயந்திரச்சாலையில் வேலை செய்து கொண்டிருந்தான். முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த போரின் அனுபவங்களைப் பரிவுடன் கேட்ட பலரும், நாளடைவில் அவனைக் குறித்து அவனது செவிப்புலனைப் பரிகசிப்பதும், பக்கம் சார்ந்து பேசுவதும், அந்நியப்படுத்தி வைத்தலுமாகச் சில செயல் முறைகளை நடப்பிக்கத் தொடங்கினர்.

இதன் நிமித்தம் அவனுக்குத் தன் எதிர்காலம் குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வித அச்சம் மேலெழத் தொடங்கியது. ஆரம்பத்தில் வைத்தியசாலையில் அவனது செவிப்புலன் குறித்து வைத்தியர்கள் கூறிய நம்பிக்கை வார்த்தைகளும் நாளடைவில் பொய்த்துப் போய் விட்டன.

இருப்பினும், அவன் வாழ வேண்டியிருந்தது. அவனுக்கென்று ஒரு குடும்பம் இருந்தது. அன்பான மனைவி... ஆசைக்கு ஒரு பெண் குழந்தை... இந்த இருவருக்காகவும் அவன் வாழவேண்டியிருந்தது. மனைவியின் புரிந்துணர்வு... மகளின் செல்லப் பேச்சுக்கள்... சிணுங்கல் மொழிகள்... அனைத்தும் சமூகத்தின் ஊனப் பார்வைகளையும் மீறி, அவனை வாழ்வின் பயணத்திலிருந்து தவறான பாதைக்கு இட்டுச் செல்லாமல் காப்பாற்றிக் கொண்டிருந்தன.

வலதுகுறைந்தோரின் வாழ்வியலை நேசிக்கத் தெரியாத,,. புரிந்து கொள்ள முடியாத... இந்தச் சமூகத்தின் பார்வைகளில் உள்ள ஊனங்கள் அனுபவப்படாத தன்மையின் வெளிப்பாடே! இவை அந்தப் பார்வைகளில் உள்ள குறைபாடுகளே தவிர, அங்கவீனமாகி நிற்கும் மனிதர்களின் உடல்களில் உள்ள குறைபாடுகள் அல்ல.

அவயவங்களின் இழப்பின் வலியைப் போரினுள் சாவை ருசித்து மீண்ட மனிதர்களுக்கே தெரியும். அதன் வலியும் வஞ்சிப்பும் எப்படிப் பட்டதென்று அனுபவப்பட்டவர்களுக்கே நன்கு ஆழமாகப் புரியும்!

"அப்பாக்குஞ்சு! என்ன யோசிக்கிறியள்...?"

அவன் சுயநிலையடைகிறான். .

"ம்... ஒண்டுமில்லையம்மா செல்லம்..." கூறிக் கொண்டே, தனது மகளை மீண்டும் தன் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொள்கிறான்.

இன்றைய பொழுது கழிந்தால்... நாளைய விடியலில் நாற்பது மைல்கள் தாண்டிய பயணம். வாரம் ஒருதடவை அல்லது மாதம் இருதடவைதான் மனைவி பிள்ளையைப் பார்க்க வரமுடியும். மகளையும் மனைவியையும் விட்டுப் பிரிவது மனதுக்குக் கஷ்டமும் வேதனையாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் சில இடங்களில் நிலவும் பாதுகாப்பற்ற தன்மை அவனுக்குப் பயத்தை வேறு அளித்துக் கொண்டிருந்தது. இருந்தும், அவன் மீண்டும் வேலைக்குப் போக வேண்டிய சூழ்நிலை. கூடவே, அவனுள் எதிரொலிக்கும் மனைவி கூறிய வார்த்தைகள்...

"இஞ்சருங்கோ...! இப்ப போற இடத்தில ஆர்... எவை உங்களைப்பற்றி ஊத்தைத்தனமாக் கதைச்சாலும், நீங்கள் அதைப் பெரிசுபடுத்தமால் உங்கட வேலையில கவனமாக இருங்கோ. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தானே தெரியும். சண்டைக்குள்ள அம்பிட்ட எவனும் வலது குறைஞ்ச ஆட்களைப் பார்த்து இப்படிக் கேவலமாக நையாண்டி செய்யமாட்டான்."

பாவம் அவள்! அவன் வேலையை விட்டிட்டு வந்த நாளில் இருந்து வாழ்வாதாரத் தேவைகளுக்காக பொருளாதார ரீதியில் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் போனாள். எத்தனை நாளைக்குத்தான் எத்தனை வீடுகளில் இரவல் கேட்பது...?

'மனைவி கூறியது போல், இனி என்ன நிலைவந்தாலும், யார் எவர் அங்கக் குறைபாட்டைக் கேவலமாக விமர்சித்தாலும், இந்த வேலையில் இருந்து விலகுவதேயில்லை'

அவன் தனக்குள் இறுக்கமான... அதேசமயம் தெளிவான ஒரு முடிவை எடுத்துக் கொள்கிறான். அவனது மார்போடு சாய்ந்திருந்த செல்லக்குழந்தை மெல்ல உறங்கிக் கொண்டிருந்தாள்.

அந்த நிலையிலும், அவளது வாய் ஏதோ முணுமுணுத்தபடி...

"இறுங்குப் பொரி உருண்டை... அப்பா இறுங்குப் பொரிஉருண்டை..."

- உதயன் - சூரியகாந்தி : 21-12-2014.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறங்குமுகங்கள்

எனது கிராமத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள வீட்டுத் திட்டப் பயனாளி ஒருவரின் கல்வீட்டுக்கு 'கொங் கிறீட்பிளாட்' அமைக்கும் வேலைக்குப் போன இடத்தில், நான் அவனைச் சந்திப்பே னென கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. அவனும் அப்படித்தான் நினைத்திருக்க வேண்டும். என்னைக் கண்டதும் அவனது முகத்தில் ஒருவித திகைப்புணர்வு... உந்தப் பட்டதை அவதானித்துக் கொண்டேன். அதேபோன்று எனது முகமும் மாறுதல் களை வெளிப்படுத்தியிருக்கலாம். அவனும் அதை அவதானித்திருக்கலாம்.

எனக்கும் அவனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமானது காலம் கடந்து பலவருடங்களுக்கும் மேலாகி விட்டன. ஆயினும், இப்பொழுதும் கூட, அது பதிந்து கிடக்கிறது என் மனதுள்.

அவனுக்கும் அன்றைய நிகழ்வு அவன் மனதுள் பதியப்பட்டிருக்கலாம் அன்றி பத்தோடு பதினொன்றாக மறந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருக்கலாம். என்னைப் போன்றே பலரும் அவனோடு வாய்மொழி மூலம் தர்க்கப்பட்டிருக்கிறார்கள். இப்படியான சூழ்நிலையில் அவன் என்னை மட்டும் மனதில் வைத்திருக்க முடியுமா? முடியும்... என்றே என் உள் ஆத்மா உரைக்கிறது.

போருக்கு முன்னைய காலம் அது!

அவன் ஒரு போராளி. அதுவும் நான் வாழும் பிரதேசத் திற்குட்பட்ட வனவள பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பாளராக தலைமைப்பீடத்தால் நியமிக்கப்பட்டிருந்தான். அவனது இயக்கப் பெயர் ' அரவிந்தன்' எனவும் அறியமுடிந்தது.

நான் வாழும் பிரதேசத்தில் உள்ள வன வளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, எந்தவொரு தனிநபரும் காடுகளுக்குச் சென்று வரிச்சுத்தடிகள் வெட்டவோ பயனுள்ள பாலை மற்றும் முதிரை போன்ற மரங்களைத் தறிக்கவோ தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இத்தடையுத்தரவு, வீட்டு வளவுகளிலும் வானோங்கி வளர்ந்து நின்ற வேம்பு, பலா உள்ளிட்ட காட்டு மரங்களையும் தறிப்பதற்கு இடையூறாக இருந்ததில், மக்கள் பல அசௌகரியங்களையும் எதிர் நோக்க வேண்டி வந்தது.

ஒரு வீட்டுக்காரன் தனது வீட்டுத்தேவைக்காக தன் வளவில் உள்ள மரங்களைத் தறிப்பதற்கு, வனவள பாதுகாப்புப் பிரிவில் பணம் செலுத்தி, அவர்கள் தரும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். பின் ஒருவாரம் கழிந்த நிலையில், பாதுகாப்புப்பிரிவில் உள்ள ஒருநபர் வீடுதேடி வந்து மரத்தைப் பார்வையிட்டு, என்னென்ன தேவைகளுக்காகவும் யார் எவர் தறிக்கிறார்கள்...? என்ற விபரங்களையும் வீட்டு உரிமையாளர் வாய்மொழி மூலம் ஒப்புவிக்க வேண்டும். அதன் பின்னரே மரத்தைத் தறிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

ஒரு தடவை எனது தேவையொன்றுக்காக வளவில் உள்ள வேப்பமரமொன்றைத் தறிப்பதற்கு வனவளபாதுகாப்புப் பிரிவுக்குச் சென்ற போது... பொறுப்பாளர் அரவிந்தன் காட்டிய அலட்சியப் போக்கும் கடுமையான வார்த்தைப் பிரயோகங் களும் எனக்குள் எரிச்சலை உண்டு பண்ணி விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் நிதானமாக மனசைக்கட்டுப்படுத்த முடிய வில்லை. வாயைத்திறந்தேன்.

"தம்பி! விண்ணப்பம் தந்து இப்ப ரண்டு கிழமைக்கு மேலாச்சுது. மரத்தைப் பார்த்தபிற்பாடு தான், மரந்தறிக்க முடியு மெண்டால், நீர் ஒருக்கா வந்து பார்த்திட்டுப் போக வேண்டியது தானே... எத்தனை தரம் இஞ்சை வந்து இழுபடுகிறது..."

அரவிந்தன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

அவனது பார்வையில் அலட்சியம் தெரிந்தது.

"என்ன நீர் உதிலை நிண்டு கனக்கக் கதைக்கிறீர்...? நீர் கேட்டவுடனை நான் ஓடிவந்து பார்க்கிறதுக்கு, நானென்ன வேறை வேலை வெட்டி இல்லாதவன் எண்டு நினைச்சீரா...?"

"உமக்கு வேறை வேலை வெட்டி இருக்கிறதைப்பற்றி எனக்குப் பிரச்சினையில்லை. நான் கேட்கிறது என்ரை வீட்டுத் தேவைக்கு எனது வளவுக்குள்ளை நிற்கிற மரத்தைத் தறிக்கிறதுக்குத்தான்..."

"ஹலோ! உதிலை நிண்டு தேவையில்லாத கதைய ளெல்லாம் கதைக்க வேண்டாம்..."

முகம் இறுகிய நிலையில் அரவிந்தன் மேலும் கூறுகின்றான்.

மரத்தோடு சம்பந்தப்பட்ட, சில தேவைகளுக்காக அங்குவந்து நின்ற மக்களின் முகங்களில் கலவர உணர்வு.

"என்ன தேவையில்லாத கதை? தேவையில்லாத கதையள் கதைக்க உம்மைத்தேடிவர வேண்டிய அவசியம் எனக்கில்லை..."

எனது வார்த்தைகளும்... நிதானம் இழப்பதை என்னால் உணர முடிகிறது. ஆயினும், அவன் முன் விட்டுக் கொடுத்துப் போக எனக்கான சுயகௌரவம் முன்வரவில்லை அக்கணத்தில்.

"நான் ஒன்றும் காட்டுக்கை போய் மரம்தடி வெட்ட அனுமதி கேட்டு வரேல்லை. என்ர பாட்டனும் பூட்டனும் எனக்கான வளவுக்குள்ளை எனது தேவைக்காக நட்டு வளர்த்த மரத்தைத்தறிக்க, எதுக்கு நான் உன்னட்டை அனுமதி கேட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணும்? அதை முதல்ல நீ சொல்லு..."

அங்கு நின்ற மக்களின் மனதில் எனது கேள்வி நியாயமாகப் பட்டிருக்க வேண்டும். சிலர் ஒருவரை ஒருவர் பார்த்து முறுவலித்துக் கொண்டார்கள்.

அரவிந்தன் இதைக் கவனிக்கத்தவறவில்லை. அவனது மனசாட்சிக்கு அது சரியெனப்பட்டிருக்கிறது. தனது மன நிலையில் இருந்து சற்று கீழே இறங்கி வந்தான். சில விநாடி வரை மௌனம் சாதித்தான்.

"சரி... குறை நினைக்காதையுங்கோ! அடுத்த கிழமைக் குள்ள மரத்தைப் பார்க்க ஆளை அனுப்பி வைக்கிறன். இதிலை நிண்டு பிரச்சினைப்படாமல் போட்டு வாங்கோ..."

இப்போது அவனது குரலில் கடுமையிருக்கவில்லை. அதிகாரத்தொனி தென்படவில்லை. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மேற்கொண்டு நானும் எதுவும் பேசவில்லை. பேசினால் அது எனக்கு மரியாதைக் குறைவு என்பதை உணர்ந்து கொண்டேன். அத்தோடு அந்த இடத்தில் நிற்பவர்களின் மனதிலும் தரம் தாழ்ந்து போகவும் கூடும்... என்ற எண்ணம் என்னுள் உந்தவே, நானும் மௌனமாக எனது மிதிவண்டியை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன்.

இரண்டு வாரங்கள் கழிந்துவிட்டன. அரவிந்தனின் ஆள்வரவே இல்லை. அதற்கிடையில் அடிபாட்டுக்கான களம் மாவிலாறு மற்றும் மன்னாரில் இருந்தும் தொடங்கிவிட்டது. ஊரின் முகமும் சிதைய ஆரம்பித்து அவரவர் மனம் போன போக்கில் ஓடிப் போய்... முடிவில் முள்ளிவாய்க்காலில் முடங்கிக் கொண்டார்கள்.

"தம்பி ராசன்... என்னடா யோசினை...! 'வீல்பரோ'வை எடுத்து மண்ணைப் போடன்."

நான் சுயநிலையடைகிறேன்.

மேசன் சிவராசா என்னைப் பார்த்துக்கூறி விட்டு, சாந்துக் கரண்டியையும் மட்டக்கம்பினையும் எடுத்துக் கொண்டு, பிளாட் பலகையில் சார்த்தி வைக்கப்பட்ட ஏணி மீதேறி மேலே போகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவிந்தன்... அந்த வீட்டின் முன்பாக ஒருபக்கத்தில் அமைக்கப்பட்ட சிமெந்து மேடையில் மண்ணுடன் சிமெந்தைக் கலந்து கொண்டிருந்தான்.

கால்கள் இரண்டையும் அகல விரித்தபடி... கும்பி மணலுக்குமேல் கொட்டிப்பரவப்பட்ட சிமெந்தினை, அவன் மண்வெட்டியால் இழுத்துக் கலப்பதைப் பார்த்தபடியே... அடுத்த கலவைக்காக இன்னொரு பகுதியில் ‘வீல்பரோ’ மீது மண்ணை நிரப்பிக் கொண்டிருந்தேன் நான்.

மேசன் தொழிலிலுள்ள அனுபவக் குறைவு... அரவிந்தன் மண்ணுடன் சிமெந்தைக் கலக்கும் விதத்தில் தெரிந்தது. எனது மனம் இப்போது அவனுக்காக அனுதாபப் படுகிறது.

தேநீர் இடைவேளைக்காக வேலை நிறுத்தப்படுகிறது. எல்லோருக்கும் பால்தேநீரும் பருப்பு வடையும் பகிரப்படு கின்றன. அரவிந்தன் ஒரு கொங்கிறீற் கல்லின் மேல் அமர்ந்திருந்தவாறு வடையைக் கடித்துக் கொண்டிருந்தான். நானும் எனக்குரியதோடு சென்று அவனருகில் அமருகிறேன். அவனது முகத்தில் லேசான புன்னகை! பதிலுக்கு நானும் புன்னகைத்து விட்டு, அவனுடன் கதைக்க ஆரம்பித்தேன்.

“தம்பிக்கு என்னைத் தெரியுதா...?”

“ஓமோம்...”

சற்றுத்தயங்கியவாறு அவன் கூறும்போது கூச்சப் படுவது எனக்குப்புரிகிறது.

“ஊரில கனநாளாய் காணேல்லை...”

“இப்ப ரண்டு கிழமைக்கு முன்னம்தான் தடுப்பாலை வந்தனான்...”

“ஓ...!”

நான் ஆச்சரியத்துடன் அவனை நோக்குகின்றேன்.

அவனது மனதில் பழைய நினைவுகள் தோன்றியிருக்க வேண்டும். என்னோடு கதைப்பதை அவன் தவிர்க்க முயல்வது தெரிந்தது. ஒருகாலம் ஆளுமை மிக்கவனாக... பல பொறுப்புக் களை வகித்தவனை... வாழ்ந்தவனை நம்பிக்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரோகங்கள் அதலபாதாளத்தில் வீழ்த்தி விட்டுச்சென்றதை நினைத்து... மனம் குமைகிறானோ? என்னால் அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

தேநீர் இடைவேளைக்குரிய நேரம் முடிந்ததும் மீண்டும் ஆரம்பமாகிறது வேலை. அவரவர் தங்களுக்கான பணிகளைச் செய்ய ஆயத்தமாகின்றனர்.

மீண்டும் மண் அள்ளிப்போட்டு... சிமெந்து கொட்டி... சல்லிக்கற்களைப் பரவி... நீர்விட்டுக் குழைக்கும்போது அரவிந்தனால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அவனது உடல் களைக்கத் தொடங்குகிறது... மூச்சு வாங்குகிறது... முகத்தில் இருந்து வியர்வை வழிகிறது... வெயில் வேறு சுட்டெரிக் கின்றது... நான் அவனருகில் செல்கின்றேன். அவனது கரத்தில் இருந்த மண்வெட்டியை வாங்கிக் கொள்கின்றேன். சிமெந்துக் கலவையைக் குழைக்க ஆரம்பிக்கின்றேன். அவன் சற்று ஒதுங்கி ஒரு மர நிழலின் கீழ் நின்றான்.

சிமெந்து மேடையில் இருந்த கொங்கிறீற் கலவையை எனது கரங்களில் உள்ள மண்வெட்டி இழுத்துக் கிளறிக் குழைக்கின்றது. கூடவே எனது சிந்தனைகளும் கிளறுப்படு கின்றன.

முன்னைய நாட்களில் ஒரு பிரதேசத்திற்குப் 'பொறுப் பாளர்' என்ற ஆளுமையோடு இருந்து செயற்பட்டவன்... இன்று ஒரு 'கூலித்தொழிலாளி' என்ற நிலைக்கு இறங்கி வந்து நிற்கின்றான்.

வரிச்சீருடையில்... ஒருபிரதேசத்தின் வனவளப் பகுதிக்குப் பாதுகாப்புப் பொறுப்பாளராக இருந்த அவனா இவன்...? என்ற எண்ணம் அலை மோதுகிறது என்னுள்.

இவனைப்போன்ற இன்னும் எத்தனை பேரின் 'இறங்குமுகக் கதைகள்' இதுவரை வெளியே தெரியவராத நிலையில், இவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத வகையில், இப்போது இருப்பவர்களால் மேற் கொள்ளப்படும் இன விடுதலைக்கான நோக்கம் சாத்தியப்படுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுகாலம் செய்த கொடுமையா...? அன்றிக் காட்டிக் கொடுப்புகளால் எழுந்த எதிர்விளைவா?

எனக்குக் குழப்பமாக இருந்தது. வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. மேசன் சிவராசா அடிக்கடி கோபப்பட ஆரம்பித்தார்.

பிற்பகல் மூன்று மணியளவில் வேலை முடிவுக்கு வருகிறது. அரவிந்தன் மண்வெட்டி, சவள் முதலியவற்றைக் கழுவி வைக்கிறான். வீட்டுக்காரரிட மிருந்து அன்றைய நாளின் ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு அனைவரும் வீடு திரும்புகின்றோம்.

அரவிந்தன் தனது தோள்களில் மேசன் சிவராசாவின் நான்கடி மற்றும் ஆறடி நீளமுள்ள மட்டக்கம்புகளைச் சுமந்த படி... எனக்கு முன்பாக... சிவராசாவுக்கு பின்பாக அவருடன் ஏதோ உரையாடிய படி... சென்று கொண்டிருந்தான்.

ஒரு காலத்தில் ஓர் இனத்தின் விடுதலைக்காக ஏ.கே.துப்பாக்கிகள் தொங்கிய தோள்களில் இன்று மட்டக் கம்புகள்!

வரலாறு ஒரு பதிவை எழுதிச் செல்கிறது. நானும் அவர்களின் பின்பாக சென்று கொண்டிருந்தேன்.

- ஜீவநதி : புரட்டாதி, 2015.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புத்தின்னிகள்

"டேய் பொடியள்! நான் வரும் வரைக்கும் வீட்டைவிட்டு வெளிக்கிடப் படாது. ஒழுங்கா புத்தகத்தை எடுத்து வைச்சுப் படியுங்கோ..."

வழக்கம்போல அவள் வேலைக்குப் போகும்போது கூறும் வார்த்தைகள் தான் அவை.

பொடியளும் நல்ல பிள்ளைகளாக தலையாட்டி விட்டு, தாய் தனது மிதி வண்டியை எடுத்துக் கொண்டு ஒழுங்கை யில் ஏறி, சந்தியால் திரும்பியதும் மூத்த வனும் சின்னவனும் ஆளுக்கொருபக்கமாக கிரிக்கெட் விளையாடச் சென்று விடுவார்கள்.

அவளுக்கு இது ஒன்றும் தெரியாத விடயமல்ல!

தகப்பன் இல்லாத பிள்ளைகள்... எவரது கட்டுப்பாடுமற்ற வகையில், தான் தோன்றித் தனமாக வளர்ந்து விடக் கூடாதே... என்ற கவலையில். அவ்வப்போது கண்டிப்பான வார்த்தைகளை அவள் உச்சரிப்பதுண்டு.

அவளுக்குத் தன் இருபிள்ளைகளைக் குறித்து... அவர்களது எதிர்காலத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து... கனவுகள் பல இருந்தன; கவலைகளும் நிறைய இருந்தன.

எப்படியாவது இனியாவது வாழ்க்கையில் நிமிரத்தான் வேண்டும்... எனும் உறுதிப்பாடு அவளது உள்ளத்தில் வீரியமாய் எழுந்து நின்றது. தன் முன்னே எழும் தடைகளை துயர்களை தன் பிள்ளைகளுக்காக அவள் துச்சமென மிதித்து வாழத் தலைப்பட்டாள்.

படிக்கிற பொடியள் ரண்டும் வளர்ந்து ஆளாகியிட்டுது களெண்டால் எனக்கெப்பன் நிம்மதி... என்ற நம்பிக்கையை மட்டும் அவள் தன் மனதிலிருந்து சிதறிப் போகவிடாமல், உடலில் இருக்கும் வலுவோடும் உள்ளத்தில் உறைந்த ஓர்மத்தோடும் போராடிக் கொண்டிருந்தாள்.

தெருவில் வீசும் காற்றுக்கு எதிரான திசையில் மிதி வண்டியின் மிதிகட்டைகளை மிதிக்க அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. நேரத்திற்குப் போக வேண்டும்... என்ற எண்ணத்தில், அவள் தன்பலம் கொண்ட மட்டும் மிதிவண்டியின் மிதி கட்டைகளை மிதித்தபடி... சென்று கொண்டிருந்தாள்.

தூரத்தே தெரிகிறது அவள் பணிபுரியும் நிறுவனம்.

'இனி எத்தனை மணிக்குச் சமையல் முடியப் போகுதோ...? உதவியாய் நிற்கிற மற்றப் பொம்புளையளும் வந்திட்டுதுகளோ... அல்லது இனித்தான் வருங்களோ...?'

அவள்தனக்குள் சிந்தித்தவாறு... அந்த நிறுவனத்தின் சமையல் கட்டுப் பகுதிக்குள் நுழைகிறாள். அங்கு ஏற்கனவே அவளுக்கு உதவி ஒத்தாசையாகப் பணிபுரிகிற இரு பெண் களும் வந்து இரவுச்சாப்பாட்டிற்கான ஆயத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அவளைக் கண்டதும் அந்த இரு பெண்களின் முகங்களும் மலர்ந்து கொண்டன.

"என்ன பிள்ளை... இண்டைக்குப் பிந்தியிட்டுது."

"ஓமக்கா... படுத்தாப்போல நித்திரையாய் போனன்..."

"நெடுக உப்பிடியே நெருப்பு வெக்கேக்கை கிடந்து நெருப்பைத் திண்டு கொண்டிருந்தால், உடம்பில சூடேறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரை வரத்தானே செய்யும்..."

பதிலுக்கு இரண்டாமவள் கூறுகிறாள்.

"இப்படியே நெருப்பைத் திண்டு திண்டு சாக வேண்டியது தான்..."

முதலாமவள் சிரித்தபடி கூறினாலும், அந்த வார்த்தையின் கனதியை அவளால் புரிந்துகொள்ள முடிகிறது.

அவள் சமையலில் கவனம் செலுத்தத் தொடங்கினாள்.

இரவுச்சாப்பாட்டிற்காக இடியப்பமும் அதற்கான கறிக்காக பருப்பு, உருளைக்கிழங்கு மற்றும் பால் சொதி என்பவற்றைத் தயாரிக்கும் செயற்பாடுகளில் அவள் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதிலும், உதவிப் பெண்களில் ஒருத்தி கூறியது போன்று இந்தச் சமையல் நெருப்புத்தான் என்னையும் என் போன்றவர்களையும் திண்டு சாகடிக்குமோ...?

அவளால் அந்தச் சிந்தனையில் இருந்து விடுபட முடியவில்லை.

தனித்துப் போன துயர வாழ்வுக்குள் அவள் பட்ட; படுகின்ற அவலமும் அந்தரிப்பும் பலவகையானவை. அவளின் வரண்ட வாழ்க்கையைக் கண்டு, வெருண்டு விலகிய உறவினர்களின் பின்னால் ஊர்ந்து செல்லவோ அன்றி உதவிகள் பெறவோ அவள் விரும்பவில்லை.

தனக்கென்றொரு தன்மானத்துடன் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமென்ற எண்ணத்துடன், அந்த நிறுவனத்தில் உள்ள வெளிமாவட்டப் பணியாளர்கள் பத்துப் பேருக்கு மூன்று வேளைகளுக்குமாக சமைத்துக் கொடுக்கும் பணியில், அவள் தன்னை இணைத்துக் கொண்டாள்.

ஆரம்பத்தில் தொழில் ஒன்று கிடைத்ததென்ற சந்தோஷம் அவளது உள்ளத்தில் நிறைந்து கொண்டாலும், நாளடைவில் அப்பணியின் சுமை அவளைப் பாதிக்கவே செய்தது. உதவிக்கு வேறு அவளைப் போன்று இரு விதவைப் பெண்களை நிறுவனம் நியமித்திருந்த போதிலும், மூன்று வேளைக்கும் ஒன்றரை மணித்தியால இடைவெளி ஓய்வைத் தவிர, மற்றைய நேரங்களில் நெருப்புக்கு முன்பாக நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட வேண்டியிருந்தது.

படிக்கும் வயதில் இரு ஆண் பிள்ளைகள் வேறு இருந்ததால், அவர்களுக்காக அவள் அடுப்பு வெக்கையோடு சிரமப்பட்டாள். கடந்தகால அனர்த்த சூழ்நிலைகளுக்கு நடுவில், அவள் தன் கணவனைப் பறிகொடுத்ததோடு, மூத்த மகள் காணாமல் போன நிகழ்வும் அவள் மனதைத் தொடர்ந்து சித்திரவதை செய்து கொண்டிருந்தது.

அடுப்பிலே உள்ள இட்லிச் சட்டியினுள் இடியப்பங்கள் அவிந்தபடி... இருந்தன. உதவிப் பெண்கள் இருவரும் வெற்று இடியப்பத்தட்டுகளில் மாவைப் பிழிந்தவண்ணமிருக்க, அவளோ கறிகளுக்கான செயற்பாட்டில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

"மெய்யே! இந்த நிறுவனமும் வேலை முடிஞ்சு வேறை இடத்துக்குப் போகப் போகுதாமே...?"

இடியப்பம் பிழிந்து கொண்டிருந்த பெண்களில் ஒருத்தி மற்றவளோடு கதைக்க ஆரம்பித்தாள்.

"எனக்கென்னவோ ஒண்டுமாத் தெரியேல்லை..." இரண்டாமவள் கூறுகின்றாள்.

"ஊருக்குள்ளை றோட்டுப் போடுற வேலையளும் குறைஞ்சு கொண்டு போகுது. அதுதான் நிறுவனம் வேறை இடத்துக்குப் போகப் போகுது போலை..."

"..................."

"அப்பிடிப் போச்சுதெண்டால் நம்மட பாடும் அதேகதி தான்..."

"என்னாலும் வரவர ஏலாதாம். நெடுக நெருப்புக்கை முன்னாலை கிடந்து அவிய ஏலுமே?"

உதவிப் பெண்கள் இருவரினதும் உரையாடல்கள் அவளது செவிகளில் விழ, அவளுக்கு ஒருகணம் தடுமாற்ற மடைகிறது மனம்.

அடுப்பில் வெந்து கொண்டிருந்த பருப்புக்கறிக்கு பாலூற்றிக் கொண்டிருந்த அவள், திரும்பி அவர்கள் இருவரையும் பார்க்கிறாள். பெண்கள் இருவரும் தம்மிடையே கதைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி... தம்பணியில் கவனமாயிருப்பது தெரிந்தது அவளுக்கு.

கடவுளே! இந்த நிறுவனம் வேலை முடிஞ்சு வேறை இடத்துக்குப் போனால் என்ரை நிலை...?

மனக் குழப்பங்களுடன் அவள் தன் பணியை முடித்து விட்டு நிமிர்ந்த போது, இரவு ஏழுமணியாகி விட்டிருந்தது. செய்து முடித்த சாப்பாட்டை உரியவரிடம் பொறுப்புக் கொடுத்து விட்டு, அந்தப் பெண்கள் மூவரும் அவரவர் தம் இருப்பிடங்களை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

அவளுக்கு மனநிலை ஒரு முகமாயில்லை; தற்போதைய சமையல் பணி நிரந்தரமில்லையென்பது அவளுக்குத் தெரிந்த விடயம் என்றாலும், அது சடுதியாக நிறுத்தப்பட்டால் என்ன செய்வது...? என்ற துயரிலூறிய சிந்தனைகளோடு தன் குடிசையை நெருங்கினாள். குடிசையின் வாசலுள் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கிற்கு முன்பாக அவளது சின்னவன் அழுதபடி... இருந்தான்.

அவள் மனம் பதறியவளாய்... தனது மிதிவண்டியை அவசரமாகக் குடிசையின் முன் நிறுத்தி விட்டு, சின்னவனுக்குக் கிட்ட நெருங்கினாள். சின்னவனின் வலது பாதத்தின் கீழ் இரண்டங்குல நீளத்தில் சதை பிளந்த நிலையில் இரத்தம் வடிந்தபடி இருந்தது.

"என்னடா நடந்தது...?" அவள் திகிலுடன் கேட்டாள்.

"கிரிக்கெட் விளையாடப் போன இடத்தில பிசுங்கான் ஓடு வெட்டிப் போட்டுது..." கூறியபடி ... பக்கத்தில் வந்து நின்றான் அவளின் மூத்தவன்.

"ஆ... கடவுளே...! அங்கை நான் நெருப்புக்கை கிடந்து தின்னுறது பத்தாதெண்டு இதுவேறை எனக்கு..."

ஆத்திர உணர்வோடு கத்திய அவள், பழந்துணியொன்றை எடுத்துக் கிழித்து சின்னவனின் பாதத்தைக் கட்டினாள்.

திரும்பவும்–

அந்த நேரத்தில்... அந்தா இரா இருட்டுக்கூடாக, மிதிவண்டியின் பின்புறத்தில் அவனை ஏற்றிக்கொண்டு விரைந்து கொண்டிருந்தாள் வைத்தியசாலையை நோக்கி...

- உதயன் - சூரியகாந்தி : 03 -01.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதையும் கத்தரிக்காயும்

சிறிய பேசின் தண்ணீரில் ஊறப் போட்டிருந்த பச்சை அரிசியைக் கழுவிக் கொண்டிருந்தாள் சந்திரா. நேரத்திற்கு உரலில் போட்டு இடித்து... மாவாக்கி வறுத்து பொழுதுபடுவதற்கு முன், பிட்டு அவிக்க வேண்டும்... என்ற எண்ணம் மேலோங்கி நின்றது அவளது உள்ளத்தில்.

அதேநேரம் வீட்டின் பின்புறத்தில் கோடரியால் கொத்திப்பிளந்த விறகுத் தடி களை அள்ளிக் கொண்டு வந்து, குசினியின் வெளிப் புறத்தில் போட்ட சந்திராவின் தாய் தங்கமலர், குசினியை நோக்கிக் குரல் கொடுத்தாள்.

"பிள்ளை! அரிசியைக் கழுவிப் போட்டியே மோனை...?"

"ஓமம்மா... தண்ணி வடிய விட்டிருக் கிறன்..."

குசினிக்குள்ளிருந்து சந்திரா பதில் கொடுத்தாள்.

தங்கமலர் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசினிக்கு வெளியே கிழக்குப் பக்கமாக மூன்று கொங்கிறீட்கல்லை அடுப்பாக வைத்துவிட்டு, அதன் மேல் தாச்சிச் சட்டியை வைத்தவளுக்கு முத்தாச்சியின் ஞாபகம் வந்தது.

"எடி பிள்ளை! இவ எங்கட முத்தாச்சிக்கு ஏதும் சுக மில்லையே? கனநாளா இஞ்சால வீட்டுப்பக்கம் காணேல்லை..."

குசினிக்குள் இருந்து வெளியே வந்தாள் சந்திரா.

"ஆச்சி இண்டைக்கு வந்தால் நல்லாயிருக்கும். மாவை அரிச்சுத் தருவா..."

குசினிக்குள்... கழுவிப் போட்ட அரிசியில் இருந்து நீத்துப் பெட்டியூடாக வடிந்து கொண்டிருந்தது நீர்.

□□

வெப்பம் குறையும் பிற்பகல் வேளை அது.

ஒழுங்கையில் குளிர்களி(ஐஸ்பழம்) விற்பனைக்காகச் சென்று கொண்டிருந்தது ஒரு சிறிய வாகனம். அதில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கியினூடாக வெளிவந்த வண்ணமிருந்த தற்கால அறுவைச் சினிமாப் பாடலொன்று, குடிசையின் தாழ்வாரத்திண்ணைக் குந்தில் படுத்திருந்த முத்தாச்சியின் தூக்கத்தைக் கலைத்து விட்டது.

முத்தாச்சி படுத்திருந்தவாறே தலையைச் சற்று நிமிர்த்தி ஒழுங்கைப் பக்கம் பார்க்கிறாள். குளிர்களி வாகனம் சற்று தூரத்தே சென்று விட்டதை ஒலிபெருக்கிப் பாடலின் குறைந்து செல்லும் ஒலியில் இருந்து அவளால் உணர முடிகிறது.

அவளுக்குத் திண்ணையை விட்டு எழ மனதில்லா திருந்தது. காலையில் மருமகள் பசுஞ்சாணத்தோடு விறகுக் கரித்தூள் கலந்து மெழுகியதில் அந்த மண் திண்ணை தண்ணென்ற குளிர்ச்சியைக் கொடுத்த வண்ணம் இருந்தது. திண்ணைக்கு மேல் இறப்பர்பாயை விரித்துப் படுத்திருந்த போதிலும், அந்தக் குளிர்மை பாயையும் ஊடறுத்து அவளின் தளர்ந்த உடலின் வெப்பச் சூட்டைத் தணித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியம் மருமகள் கொடுத்த தீட்டுப் பச்சையரிசிச் சோறும் யப்பான் மீன்குழம்பும் புளிச்சலி மாங்காய்ச் சொதியுடனும் கூடிய சாப்பாடு... அவளின் மனதுக்கும் வயிற்றுக்கும் திருப்தியைக் கொடுத்த நிலையில், ஒரு மணித்தியாலம் வரை, நல்ல ஆழ்ந்த தூக்கம் கொண்டு எழுந்து விட்டாள். குளிர்களி வாகனத்தின்பாடல் ஒலி... இடையூறு விளைவிக்காது இருப்பின், இன்னும் ஓர் அரைமணித்தியாலம் மேலதிகமாக உறக்கம் கொண்டு எழுந்திருப்பாள்.

தொடர்ந்தும் திண்ணையில் படுத்திருக்க அவள் விரும்பவில்லை. மெதுவாக எழுந்து உட்கார்ந்தபடி... ஒரு கையால் குடிசையின் தாழ்வாரக் கப்பினைப் பிடித்துக் கொண்டு, நிலையாக எழுந்து நின்றாள். இறப்பர் பாயைச் சுருட்டி, சுவர் ஓரமாக ஒதுக்கி விட்டு முற்றப் பகுதிக்கு வந்தாள். அவளிடமிருந்து பெரிதாக வெளிப்பட்டது ஒரு கொட்டாவி.

படுக்கையில் தூக்கத்தின் போது கலைந்து போன குடுமிமயிரை இரண்டு கைகளாலும் இருதடவை உதறி அடித்துவிட்டு, சுருட்டிக் கொண்டை போட்டுக் கொண்டாள்.

கிணற்றுக்கு அருகேயுள்ள வாழைமரத்தின் கீழ் வைக்கப் பட்டிருந்த தண்ணீர் வாளியை நோக்கிச் சென்றவள், இருகைகளாலும் நீரை அள்ளி முகத்தைக் கழுவிவிட்டு, சேலைத் தலைப்பினால் முகத்தைத் துடைத்தபடி... மீண்டும் திண்ணைக் குந்தில் வந்தமர்ந்தாள்.

"இந்தாங்கோ மாமி... தேத்தண்ணி..."

மருமகள் கொடுத்த தேநீரை வாங்கித் திண்ணையில் வைத்தவள், திண்ணையின் தலைமாட்டுப்பக்கம் கிடந்த ஆறங்குல உயரமான மூன்றங்குல விட்டமுள்ள சிறிய உரலை எடுத்துக் கொண்டாள். அருகே பனைஓலையில் வார்ந்து பின்னப்பட்ட 'கொட்டப்பெட்டி'க்குள் இருந்த பாக்குச் சீவல்கள், வெற்றிலைகள், நாறல் பாக்கு மற்றும் பிஞ்சுப் பாக்குத் துண்டுகள், சுண்ணாம்புச்சரை, புகையிலைத்துண்டு என்பவற்றில் கொஞ்சம் எடுத்து வெளியே வைத்துவிட்டு, பின் ஒவ்வொன்றையும் பகுதிபகுதியாக உரலின் வாய்க்குள் போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய இரும்புச் சாவியினால் இடிக்க ஆரம்பித்தாள்.

"மாமி... தேத்தண்ணியல்லோ ஆறுது..."

தற்செயலாக அவ்விடத்திற்கு வந்த மருமகள், தேநீரை ஆச்சி குடிக்காததைக் கண்டு, கூறிவிட்டுச் செல்கிறாள்.

முத்தாச்சி வெற்றிலையை இடிப்பதை நிறுத்தினாள்.

தேநீர் சற்றுச்சூடு ஆறியிருந்தது. குளிர்நீர் குடிப்பது போல் ஒரே மூச்சில் தேநீரைக் குடித்து முடித்து விட்டு, கோப்பையை ஓர் ஓதுக்குப் புறமாக வைத்தவள், சேலைத் தலைப்பினால் தன் வாயைத் துடைத்தாள். மீண்டும்... உரலினுள் கிடந்த வெற்றிலையை இரும்புச் சாவியினால் இடிக்க ஆரம்பித்தாள்.

உரலின் வாய்க்குள் சேர்க்கப்பட்ட பொருட்கள், சாவியின் ஒவ்வொரு இடியிலும், தூளாகிக் கலந்து, இப்போது செக்கச் சிவப்பாகக் காட்சியளித்தது.

ஆச்சி இடிப்பதை நிறுத்திக் கொண்டாள்.

வலது கைப் பெருவிரலை உரலின் வாய்க்குள் வைத்துக்கிளறியவள், அப்படியே இடது கையின் உட்பகுதியில் வெற்றிலைக் கலவையைக் கொட்டி, வாய்க்குள் போட்டுக் கொண்டாள். கலவை சமமாக அமைந்ததில் அவளின் முகத்தில் தெரிந்தது திருப்தி. கூடவே பக்கத்தில் கிடந்த புகையிலைக் காம்பினை எடுத்து, கைவிரல்களினால் நுள்ளி முறித்து, வாய்க்குள் வெற்றிலையோடு போட்டுக் கொண்டாள். திண்ணையில் கிடந்த உரலையும் சாவியையும் ஓரமாக ஒதுக்கி வைத்துவிட்டு, குடிசையின் தாழ்வாரக் கப்பினைப் பிடித்தெழுந்து, மீண்டும் முற்றத்துக்கு வந்தாள்.

முற்றமெங்கும் படர்ந்து நின்ற வெப்பம்... இப்போது நன்றாகக் குறைந்து விட்டிருந்தது. ஆச்சி திரும்பி அடுக்களைப் பக்கம் பார்த்தாள்.

"எடிபிள்ளை தங்கச்சி..."

"என்ன மாமி...?"

"நான் உங்காலை ஒருக்கா கனகலிங்கத்தாற்ரை வீட்டுப் பக்கம் போட்டு வாறன் பிள்ளை.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரிபோட்டு... வாங்கோ...."

ஆச்சி தெருவோரப் படலைத்தட்டியைத் திறந்து கொண்டு, ஒழுங்கையில் ஏறி நடக்க ஆரம்பித்தாள்.

□□

"டாய்... அடியடா... அவன்தான்... விடாதைபிடி... அடீ...குத்து.."

கனகலிங்கத்தின் கல்வீட்டு முன்விறாந்தையில் ரி.வியில் படம் ஓடிக் கொண்டிருந்தது. தற்கால கதாநாயகனும் இன்றைய இளைஞர்கள் சிலர் அணியும் 'ரீசேட்'டில் காட்சி யளிப்பவனுமான ஒரு திரைப்பட நடிகன் நடித்த படமொன்றை ரி.வியில் பார்த்தபடி... சில இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டுக் கத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்பாக சிமெந்து நிலத்தில் குந்தியிருந்த சில குஞ்சு குருமனுகளும் குதூகலத் தின் உச்சியில் நின்றார்கள்.

அதிலும் கனகலிங்கத்தின் மருமகன் கஜன் பலத்த சத்தமாய் கத்திக் கொண்டிருந்தான். காரணம், அவன் அந்த நாயகனின் 'உயிர் ரசிகன்'!

"டாய்விடாதை... அப்பிடித்தான்போட்டுக்குத்து... குத்து..."

கனகலிங்கத்தின் வீட்டிற்கு வந்த முத்தாச்சி, எட்டி நடு விறாந்தையைப் பார்த்தாள். ரி.வியில் படம் ஓடிக்கொண்டி ருப்பது தெரிந்தது. யாரோ ஒருவன் இன்னொருவனை நிலத்தில் போட்டுப் புரட்டி எடுப்பது புரிந்தது. ஆச்சிக்கு நாயகன் யார்...? வில்லன் யார்...? என்பதும் விளங்கவில்லை. எல்லோர் முகங்களிலும் குதூகலம் நிரம்பி வழிவதை அவள் கண்டாள். தனக்கு முன்பாக கதிரையில் அமர்ந்திருந்த கஜனிடம் கேட்டாள்.

"எட தம்பி! உன்ரை மனிசி எங்கையடா...?"

"தெரியாதணை.... அங்காலை பின்னுக்குப் போய் பாரணை..."

கஜன் எரிச்சலுடன் கூறிவிட்டு, திரும்பவும் ரி.வியைப் பார்க்க ஆரம்பித்தான்.

ஆச்சி அந்த இடத்தை விட்டு விலகி, குசினிப் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாள். குசினிக்கும் கிணற்றுக்கும் இடைப்பட்ட ஒரு இடத்தில் கஜனின் மனைவி சந்திரா, தண்ணீர் வடிந்த அரிசியை உரலினுள் போட்டு, இடித்துக் கொண்டிருந்தாள்.

முத்தாச்சி அவளுக்கு அருகில் போய் அமர்ந்தாள்.

“இஞ்சை விடுபிள்ளை நான் இடிக்கிறன். நீ போய் குசினிக்கை அடுப்பிலை கிடக்கிற கறியைப் பார்...”

சந்திராவின் தாய் தங்கமலர், அவளிடமிருந்து உலக்கையை வாங்கியபடி கூற... அவளும் தாயிடம் அதைக் கொடுத்து விட்டு, குசினிக்குள் சென்று மறைந்தாள்.

“என்னடி பிள்ளை! இனித்தானே சமையல் சாப்பாடு...?”

தங்கமலரைப் பார்த்து ஆச்சி கேட்கிறாள்.

“ஓமணை ஆச்சி. இப்ப ரண்டு மூண்டு நாளா மருமோனுக்குத் தொழில் இல்லை. வீட்டுக்குள்ளை முடங்கிக் கிடக்குது. படம் பார்க்கிறதிலை மட்டும் குறைச்சல் இல்லை.”

ஆச்சி எதுவும் பேசவில்லை. உரலினுள் இடித்த அரிசிமாவை அள்ளி தங்கமலர் சுளகினுள் கிடக்கும் அரிதட்டினுள் போடுகிறாள். ஆச்சி அதை அரித்து மாவாக்கிக் கொண்டிருந்தாள்.

வீட்டின் விறாந்தையில் இருந்து மீண்டும் அமளிதுமளியான குரல்கள் கேட்கின்றன. ஆச்சிக்கு எரிச்சலாக இருந்தது. அதேசமயம் பழைய சம்பவங்கள் சிலவும் ஞாபகத்துக்கு வந்தன.

வன்னிப் போருக்கு முன்பு கஜன் கவிதைகள் எழுதும் ஒரு ‘கவிஞனாக’ வலம் வந்து கொண்டிருந்தான். இந்தக் கவிஞன் என்ற ‘தகுதி’யை வைத்து அவனது தகப்பனார் அவனின் திருமணத்தின் போது பெண் வீட்டாரிடம் சீதனத்தை விட, மேலதிகமாக அறவிட்ட தொகை மட்டும் ஆறு இலட்சம் ரூபா! அந்த ஆறு இலட்சம் ரூபா பணத்தில் கஜன் தனக்கு உடுப்புகள் வாங்குவதற்காக செலவிட்ட தொகை அறுபத்தையாயிரம் ரூபா! இதைவிட, ஓடித்திரிவதற்காக பாவனையில் இருந்த மிதிவண்டியை ஒதுக்கிவிட்டு, மோட்டார் சைக்கிள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கியது போக, மிச்சம் மீதியனைத்தும் ஒரு வருடத்துக்குள் எப்படிக் கரைந்தழிந்தது என்பது ஒருவருக்கும் தெரியவில்லை.

காலம் விரைந்து சென்று கொண்டிருந்த நிலையில், இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி விட்டிருந்தாள் சந்திரா! போரின் வலிகளைத் தாங்கி... மீண்டெழுந்தவர்கள், இப்போது சொந்த இடத்தில் குடியேறியிருந்தார்கள். கஜனுக்குத் தொழிலும் இல்லை. கவிஞன் என்ற தகுதியை வைத்து, வாங்கிய சீதனக் காசில் மிச்சம் மீதியாய் எதுவுமிருக்க வில்லை. ஊரில் உள்ள மேசன்மாரோடு இரண்டு நாட்களுக்கு வேலைக்குச் செல்வதும், பின்பு வீட்டோடு முடங்குவதுமே அவனது தொழிலாக இருந்தது.

முத்தாச்சிக்கு ஒரு சந்தேகம் முளைத்துக் கொண்டது.

கவிதை எழுதும் தகுதியை வைத்து, காசு தொகையாய் வாங்கியவன், இப்பவும் கவிதைகள் எழுதுறானோ...?

அவள் நேரடியாகவே தங்கமலரிடம் கேட்டாள்.

"ஏன் பிள்ளை... உங்கடை மருமோன் இப்பவும் கவிதை அது இதெண்டு ஏதும் எழுதுறவரே..?"

"அவற்றை கண்டறியாத சீலம்பாய்க் கவிதையும் கத்தரிக்காயும்..."

எகிறி விழுந்தன எரிச்சலாய் அவளிடமிருந்து வார்த்தைகள்.

ஆச்சி எதுவும் கூறவில்லை. தங்கமலர் இடித்துக் கொடுத்த அரிசிமாவை அரித்துக் கொடுத்து விட்டு, எழுந்து கொண்டாள்.

"நான் போட்டு வாறன் பிள்ளை..."

"ஓமணை... இருட்டுப் படுகுது..."

ஆச்சி குசினிப் பக்கம் தாண்டி, வீட்டின் முன்பக்கம் வந்த போது, 'ரீசேட் நாயகனின்' வேறொரு படம் ரி.வியில் ஓடிக் கொண்டிருந்தது.

"உதுகளெல்லாம்..." ஆச்சி மேற்கொண்டு எதுவும் பேசாமல் அடக்கிக் கொண்டாள் தனக்குள் வார்த்தைகளை.

- உதயன் - பொங்கல் சிறப்பிதழ்: 15.01.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றுப்போனவளின் வாக்குமூலம்

இந்தச் சமூகத்தின் பார்வையில் நான் என்னவோ தோற்றுப் போய் நிற்பது உண்மைதான். ஆனால் நான் தோற்றவள் அல்ல! என்பதை இப்போது உணருகிறேன்.

நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் நான் தோற்று நிற்பது குறித்து பலரது விமர்சனங்கள்... இப்பொழுது என்னைச் சுற்றியபடி எள்ளலும் ஏளனமுமாக...

பரீட்சைக்கு முன்னாயத்த நாட்களில், அதிகாலை நான்கு மணிக்கு அப்பா என்னைத் துயில் எழுப்பி, பல்துலக்கி விடுவார். அம்மா 'ரீ' போட்டுத் தருவார். 'ரீ' குடித்ததும் மனதில் ஓர் உற்சாகம் பிறக்கும். படிக்க ஆரம்பிப்பேன். எனது தந்தை என்னருகில் கண் துஞ்சாது என்னைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து, தெரியாத கேள்விகளுக்குச் சந்தேகங்களுக்கு விடையளித்து எனை ஊக்கப்படுத்திய பிரயாசம் அனைத்தும் வீணாகிப் போய்விட்டதென்ற கவலை எனக்குள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விம்மி... விம்மி அழுதேன். அப்பா எனை அரவணைத்து ஆறுதல் வார்த்தைகள் கூறினார். அப்போது தோற்றுப் போய் விட்டேன் என்ற மன உணர்வில் தோன்றிய வலிகள் மெல்லத் தூர்ந்து போவனவாக இருந்தன.

"குஞ்சு... செல்லம்! இதற்கெல்லாம் மனம்துவண்டு அழக்கூடாது. மனசைத் திடப்படுத்திப்பழகு. தோல்வியைத் தூசெனத்தட்டி விடு. அல்லது அந்தத் தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்தறியப்பார்! அதுவுமில்லையேல், அத்தோல்வி மீது மிதித்தேறி... இன்னொரு வெற்றிக்கான பாதைக்கு உன்னைத் தயார்படுத்து. தோற்றவர்கள் எல்லாம் வீழ்ந்தவர்கள் அல்ல. தோல்வி என்பது வெற்றிக்கு நுழையும் முதல் வழி..."

அப்பாவின் அறிவுரைகள்... எப்பொழுதும் மயிலிறகின் மென்மை போன்ற உணர்வைத் தரும். மனசைத் தடவித் தைரியப்படுத்தும்! அந்த வார்த்தைகளில் ஓர் உறுதிப்பாடு வெளிப்படும். உண்மைத்தன்மை ஊக்குவிப்பு... உற்சாகம் மேலெழுந்து கொள்ளும்.

இந்தப்புலமைப்பரிசில் பரீட்சைக்காக படித்துக் கொண்டிருக்கும் நாட்களில், எனது சகமாணவர்களின் சில பெற்றோர்கள் போன்று என் அப்பா என்னுடன் கடுமையாக நடந்து கொள்ளவில்லை. புலமைப் பரீட்சைக்கான அதன் கொள்கை உருவழிந்து, மாவட்டம் மற்றும் பிரதேச ரீதியாக பாடசாலை மட்டங்களிடையே முரண்பாடுகளையும், மனமுறுகல்களையும், கௌரவப் பிரச்சினைகளையும் எப்படித் தோற்றுவித்து நிற்கின்றது என்பதை அப்பா அவ்வப்போது எனக்கு விளக்கமளித்துக் கொண்டே இருப்பார்.

எனக்கு அவர் கூறும் விடயங்களில் பலதும் ; சிலதும் புரிந்தும் புரியாமலும் தோற்றமளிக்கும். அவரின் வாய் மொழிகள் அனைத்தும் நேரிடையாய் பார்த்தது போன்று இருக்கும். அதனால்தான், நான் பரீட்சையில் தோற்று நிற்பதைப் பார்த்து... அவரால் நிதானமாக இருக்கவும் முடிந்தது! மென்மையாகக் கதைக்கவும் முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அவர் எனக்கு அப்பாவாக இருப்பதையிட்டு, நான் மிகவும் பெருமைப்படுகிறேன்!.

ஏனெனில் -

என்னோடு என் பாடசாலையில் படிக்கும் இருவரின் துன்பியல் வாக்கு மூலங்களை நான் கேட்டுக் கொண்டபோது, என் அப்பா தன் குணவியல்பிலும் இதமான உணர்வுகளின் மொத்த வெளிப்பாடாகவும் எனக்குள்ளே உயர்ந்து நிற்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

காலையில் மூன்று மணிக்கே எழுந்து படிக்க வேண்டும். நித்திரைத் தூக்கத்தில் தலைகுனியும் போது, பக்கத்தில் இருந்து கவனிக்கும் தந்தை, தனது விரிந்த உள்ளங்கையால் பிடரியில் ஓங்கி அடிப்பதும்... இப்படி ஒரு முறை அடித்த பொழுதில், முகமானது முன்னால் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த அரிக்கன் லாம்புடன் மோதுண்டபோது, சூடேறிக்கிடந்த சிமினி மீது மூக்குப்பட்டு... வெந்து மறுநாள் நீர்க்கொப்பளத்துடன் பாடசாலைக்கு வந்த என் சக மாணவிக்கு ஏற்பட்ட, வன்முறை நிலையை நினைத்துப் பார்க்கிறேன்.

புலரும் பொழுதில் தூக்கம் என் கண்களைத் தழுவும் நேரங்களில் "காலை எழுந்தவுடன் படிப்பு! பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு..." எனும் பாரதியாரின் பாடலைச் சிரிப்போடு சொல்லிச் சொல்லி எனைத் தூக்கத்திலிருந்து விழிப்புறச் செய்வார் என் அப்பா.

"என்ன செல்லம்... நித்திரை வருகுதா...?" என வினாவியபடி... என் தலைக் கேசங்களை ஆதரவாகத் தடவிக் கொள்ளும் போது அன்பு நிறைந்த அவரது இதமான பேச்சும் செயலும் என் தூக்கத்தை விரட்டியடித்து விடும். நான் பாடத்தை விட்ட இடத்திலிருந்து தொடர ஆரம்பிப்பேன்.

என் சக மாணவிக்கு அவளது தந்தையினால் ஏற்படுத்தப்பட்ட வன்முறைச் செயலை நினைத்துப் பார்க்கிறேன். எவ்வளவு கொடுமையான பிரயோகம் அது. மகள் என்ற உறவு முறைக்கப்பால், ஊரின் மத்தியில் தங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயகௌரவ மேன்மையை வெளிப்படுத்துவதற்கும், அதை தக்க வைத்துக் கொள்வதற்கும் பிள்ளைகள் மூலமாகப் புலமைப் பரிசில் பரீட்சையை ஒரு கருவியாகப் பயன்படுத்த முனையும் ஈவிரக்கமற்ற பெற்றோர்கள் இன்னும் எத்தனை எத்தனையோ எம்மத்தியில் யாரறிவார்? இந்தப் பரீட்சை ஒன்றுக்காக எனது அப்பா இப்படியான வன்முறைகளை என்மீது பிரயோகித்த தில்லை. எனக்கு எந்தவிதமான அழுத்தங்களையும் தரவு மில்லை. என்னை என்போக்கில் இயல்பாகவே படிக்க விட்டிருந்தார்.

பிள்ளைகள் மீது திணிக்கப்படும் வன்முறைச் செயற்பாடுகளின் எதிர்விளைவானது, அக்குழந்தைகளின் பிஞ்சு மனதில் விரக்தியையும், படிப்பின் மீதான வெறுப்பையும், பெற்றோர்மீது வன்ம வைராக்கியத்தையும் உண்டு பண்ணி விடுவதோடு, வாழ்நாள் பூராகவும் பழிவாங்கும் உணர்வைத் தோற்றுவித்துவிடுமென அப்பாவும் அம்மாவும் அன்றொரு நாள் ஒருவருக்கொருவர் வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டிருந்தது என் ஞாபகத்திற்கு வருகிறது.

இது இவ்வாறிருக்க, நான் இன்னொருவிடயத்தையும் இங்கே கூறிவிட விரும்புகிறேன்.

எனது வகுப்பில் படிக்கும் ஒருமாணவனுக்கு வலது முழங்கைக்கும் மணிக்கட்டுக்கும் இடையில் ஒரு பெரிய தழும்பு வீக்கமாக இருப்பதை ஒருநாள் கண்டு கொண்டேன்.

"என்னடா இது...? மசுக்குட்டி பட்டதா...?" நான் அவனை வினாவுகிறேன்.

அவனிடமிருந்து எதுவித பதிலுமில்லை. கையில் உள்ள தழும்பையும் என்னையும் மாறி மாறிப் பார்க்கிறான். அவனது முகபாவம் மாறுகிறது. விழிகளில் நீர்த்துளிகள் அரும்பு கின்றன. எனக்குள்ளும் என் மனஉணர்வுகள் குழப்பமடைய நான் அவனை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவன் தனது கைத்தழும்பை மறுகரத்தின் விரல் களினால் மெதுவாகத் தடவுகிறான் அப்படித்தடவும் போது வலி ஏற்பட்டிருக்க வேண்டும். அந்த வேதனை அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் பிரதிபலிக்கிறது. அவன் தழும்பைத் தடவுவதை நிறுத்திவிட்டு, என்னைப் பார்த்துக் கூறுகிறான்.

"அம்மா அடிச்சவ..."

"ஏன்...? நீ ஏதும் குழப்படி செய்தனியா...?" நான் கேட்கிறேன்.

அவன் இல்லையெனத் தலையாட்டி விட்டு, மறுபடியும் கூறுகிறான்.

"அம்மா அடிச்சவ... 'ஸ்கொலசிப் மார்க்ஸ்' குறைய எடுத்துப் போட்டனெண்டு, வேப்பங் கொட்டனாலை அடிக்கேக்கை நான் கையால தடுத்தன். அது எலும்பில் அடிபட்டிட்டுது..."

அவன் அழத் தொடங்கினான்.

"உனக்கு எத்தனை 'மார்க்ஸ்' வந்தது...?"

"நூற்றி அறுபத்தெட்டு..." அழுகையினூடே அவன் கூறுகிறான்.

எனக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. "கட்டவுட்டுக்கு மேலதிகமாக நிற்கும் அவனின் படிப்புத்திறன், இன்னமும் போதாதென்ற தாயின் ஆத்திரத்தின் வெளிப்பாடு அப்பட்டமாகத் தெரிந்தது அவனது கையில்.

நான் இவ்விடயம் குறித்து ஒருநாள் இரவு அம்மாவுக்குக் கூறிக் கொண்டிருந்தேன். அம்மா மிகவும் கவலையோடு கேட்டுக் கொண்டிருந்தார். வீட்டுக்கு வெளியே முற்றத்தில் இருந்த அப்பாவும் கேட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும். உடனே என்னை அழைத்தார்.

"குஞ்சு... செல்லம்! இஞ்சை வாம்மா..."

"என்னப்பா?" என்றவாறு நான் போய் அவரது மடியில் ஏறி உட்காருகிறேன்.

"என்ன நடந்தது...? கொஞ்சம் விபரமாய் சொல்லம்மா..." அப்பா கேட்கிறார்.

நடந்ததை நான் திரும்பவும் கூறுகிறேன்.

அப்பாவின் முகத்தில் விரக்தியான கேலி நிறைந்த புன்னகை அரும்பி மறைகிறது. நான் அவரது முகத்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஏழை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்தப் புலமைப் பரிசில் பரீட்சையின் எதிர்மறை நிகழ்வுகளை அப்பா இன்னொரு தடவை விளக்க ஆரம்பித்தார் எனக்கு.

"புலமைப் பரிசில் பரீட்சை என்பது கல்வி அமைச்சினால், வறுமைப்பட்ட பிள்ளைகளின் கல்விநிலை மேம்பாடடைவதற்காக தோற்றுவிக்கப்பட்ட போதும், அதன் மறைமுகமான செயற்பாடானது வசதியுள்ள பிள்ளைகளே மேலும் நிமிர்வதற்கான வாய்ப்பாக மாற்றப்பட்டிருக்கிறது. அச்சுயந்திர முதலாளிகளும் அவனவன், தாம் விரும்பியது போன்று கேள்வி - விடைகளைத் தொகுத்து, புத்தகமாக்கிப் பணம் சம்பாதிப்பதற்கும், பாடசாலை மட்டத்தில் பல கௌரவப் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்கும், சமூகமட்டத்தில் பல பெற்றோர்கள் தங்கள் கௌரவத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்குமே இந்தப் பரீட்சை வழிவகுத்துக் கொடுக்கிறது. இந்தப் பரீட்சை இல்லையேல், பலபேருடைய பகுதி நேரப் பிழைப்பு படுத்துக் கிடந்து விடும் அபாயமும் இருக்கிறது"

"உண்மையில் இது ஏழ்மைப்பட்ட மாணவர்களோடு விளையாடும் ஒரு விஷப் பரீட்சை! இந்தப் பரீட்சை சிறு வயதிலேயே ஒரு உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டுச் செல்கிறது."

"அதுமட்டுமல்ல! தூரத்து உறவுக்காரன் ஒருவன் ஒரு சாவீட்டிற்குச் ·சென்று, அங்கு சில நிமிடங்கள் இருந்து முகத்தைக் காட்டி விட்டு வெளியேறுவது போல, ஆண்டு தரம் ஒன்றிலிருந்து ஏ/எல் வகுப்பு வரையான காலகட்டத்திற்குள் இடையில் தரம் ஐந்தில் வந்து முகத்தைக்காட்டி விட்டுப் போகிறது இப்பரீட்சை."

"இப்பரீட்சையில் தோற்றுப் போனவர்கள் நிரந்தர தோல்வியாளர்கள் அல்ல! அதேசமயம் வெற்றி பெறுபவர்களும் நிரந்தர சாதனையாளர்களும் அல்ல! தோற்றவர்கள் எழுந்து நிமிர்வதற்கான தொடக்கம் இது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா கூறிக்கொண்டே போகிறார். இப்பரீட்சை பற்றி அப்பா நன்கு தெரிந்து வைத்திருப்பதால்தான், பரீட்சை முடிவுகள் வெளியானபோது, எனது மொத்தப்புள்ளிகளின் நிலை குறித்து அவரால் மௌனமாகப் புன்னகையொன்றை மட்டும் உதிர்க்க முடிந்தது.

அப்பா இந்தப் பரீட்சைக்காக மிகுந்த அக்கறை கொண்டு பாடுபட்டவர். மாலைநேரத் தனியார் வகுப் பொன்றுக்கு மழை, வெயில் பாராது தனது மிதிவண்டியில் ஏற்றிச் சென்று வந்தவர். நானும் ஊக்கத்தோடுதான் படித்தேன். எனக்குக் கல்வி போதித்தவர்களும் மிகுந்த அக்கறையோடு கற்பித்தனர். பரீட்சை நாளில் வினாக்கள் பலவும் இலகு வாகவே இருந்தன. பரீட்சை முடிந்ததும் எல்லா மாணவர்களும் பாடசாலைக்கு வெளியே நின்ற, தமது பெற்றோரிடம் கூறியது போன்று மிகுந்த முகமலர்ச்சியுடன் "நல்ல சுகமப்பா..." என நானும் எனது அப்பாவிடம் கூறிக் கொண்டேன். அப்பாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி! எனை அணைத்து முத்தமிட்டார். சந்தோஷமாக இருந்தது. அதை விட, நம்பிக்கை அதிகமாகத் துளிர்த்தது எனக்குள்.

ஆயினும்...

நான் தோற்றுப் போய் விட்டேன்.

நானும் என்னைப் போன்றவர்களும் தோற்றுப் போனதற்கான காரணத்தைக் கூறினார் அப்பா.

"பரீட்சை வினாத்தாள்களைத் திருத்துவதற்கு நியமிக்கப் பட்டவர்களின் மனநிலை அக்கணத்தில் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. விடைத்தாள்களைத் திருத்த வருபவர்களுக்கு அக;புறச் சூழ்நிலைகள், உளரீதியான அரியண்டங்கள் நிறையவே இருக்கும். பிரச்சினைகள் இல்லாத மனிதர்கள்... இந்த உலகத்தில் கிடையவே கிடையாது. வினாத்தாள் திருத்த வருபவர், என்ன மனநிலையோடு வந்து கதிரையில் குந்து கிறாரோ, அதற்கேற்றால் போல்தான், புள்ளிகளின் தொகை யும் கூடும் ; குறையும். மனநிலைக் குழப்பங்களுடன் விடை திருத்துபவராக இருந்தால், சரியான விடைகளும் அவருக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையாகவே தென்படும. கல்வியில் வளர்ச்சி குன்றிய பிள்ளைகள் சிலர் வெற்றியடைவதற்கும், தேர்ச்சியுள்ள பிள்ளைகள் பலர் தோல்வியடைந்து போவதற்கும் இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்?"

"யாரொடு யார் நோவது...? மனதைத்திடப்படுத்தி, இனி அடுத்த வகுப்புக்குச் சென்று, அதில் வரும் பரீட்சைகளில் முயற்சிசெய்தால் வெற்றியடையலாம்."

அப்பாகூறிவிட்டு... என்னைப் பார்த்துப் புன்னகைக் கிறார். என் அப்பா வாழ்க்கையில் பல தோல்விகளை, ஏமாற்றங்களை, வஞ்சிப்புக்களை எதிர் கொண்டவர்... என்பதனை ஒருநாள் அம்மா கூறக் கேட்டிருக்கின்றேன். தொடராய் வந்த தோல்விகள்... விழுகைகள் கண்டுதான், அப்பாவின் மனம் பக்குவநிலை அடைந்து துவண்டுவிடாது நிற்கிறதோ! என்று நான் எனக்குள்ளே வியப்புக் கொள்கின்றேன்.

"பரீட்சையில் நீ தோற்று நிற்பது உண்மைதான். ஆனால் வாழ்க்கையின் படிகளில் ஏறிநின்று, சாதனைகள் பல புரிவதற்கு இன்னும் நிறையச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அதைப் பயன்படுத்திக் கொள்ள நீ இப்பவே உன்னை ஆயத்தப்படுத்தம்மா!"

அப்பாவின் இந்த அறிவுரை தோற்றுப்போய் நிற்கும் எனக்கு மட்டுமல்ல, பரீட்சையில் தோற்று நிற்பவர்களுக்கும் இது பொருந்தும்... என என் மனம் சொல்லிக்கொள்கிறது எனக்குள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல;
உன்னைப்போல் சாதிக்கத்துடிக்கும் புத்திசாலி
களை மட்டுமே" என்றான் ஓர் அறிஞன்

இது என் நண்பன் - என்னோடு ஒன்றாக ஊடகங்களில் பணியாற்றிய அலெக்ஸ் பரந்தாமனுக்கு முற்றிலும் பொருந்தும். அவனுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த ஒவ்வொரு சம்பவங்களும் கதைதான்; சோகக்கதைதான். அவன் புதுக் குடியிருப்பு மண்ணில் குந்தி இருந்து அழவா பிறந்தான்? மனித உணர்ச்சி களுக்குள் - அதன் ஆழத்துக்குள் கூரிய பார்வையைச் செலுத்தினான். தன் நெஞ்சு உணர்ந்ததை நெரில் அறிந்ததை கதையாம் - கவிதையாய் - குறுநாவல்களாய் எழுதினான்.

பண்டைத் தமிழனின் குமரிக்கண்டத்தை கடல் கொண்டது போல முள்ளிவாய்க்கால் போர் இவனின் ஆக்கங்களை அள்ளிச் சென்று விட்டது. எழுத்தாளனுக்கு இழப்புக்கள் பெரிதல்ல; "விதி"யின் கணக்கற்ற தாக்குதல்கள் இருந்தும் மீண்டும் தொடங்கும் மிடுக்கோடு... எழுதியவை தான் இவை.

அன்புடன்
க. லோகநாதன்
வலம்புரி பிரதம ஒப்புநோக்குநர்

ஜீவநதி வெளியீடு - 58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org